நூலகம்

இலக்கியம்

1

நூலகம்

இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

நூலக ஞானி டாக்டர் **பா. பெருமாள்,** M.A., M.Lib.Sc., Ph.D.



தமிழவேள், பதிப்புச் செம்மல்

டாக்டர் ச. மெய்யப்பன்

: 1 செப்டம்பர், 1995 இலக்கியம் : 1

நூலகம்

இலக்கியம்

புத்தகச் செய்தி மாத இதழ்

ஆசிரியர்: நூலகஞானி - டாக்டர் பா. பெருமாள்
M.A., M.Lib.Sc., Ph.D.,

நூலகம் 1 செப்டம்பர் 1995 இலக்கியம் 1

ஆண்டு சந்தா ரூபாய் நூற்றி இருபது

நூலகக் கல்வி — தலையங்கம்
பொது நூலகத் —
துறையின் வளர்ச்சி — இரா. கண்ணன்
நூலகத் தந்தை — இரா. முத்துகுமாரசாமி
50 ஆண்டு நூலகத் தமிழ் — எஸ். ஆர். ரங்கநாதன்
நூலகத் தந்தையின் கடைசி ... — ,,
பதிப்புச் செம்மல் பேராசிரியர்
டாக்டர் ச. மெய்யப்பன் — மது. ச. விமலானந்தன்
புத்தக புராணம் — கவிச் சக்கரவர்த்தி வைரமுத்து
சங்கப் பலகை பொற்காலத் திற்கு அழைப்பு — டாக்டர் அப்பாஸ் இப்ராஹிம்
கொஞ்சமாவது விபரம் ... — தம்பி ஸ்ரீநிவாசன்
படியுங்கள் — புத்தக விமர்சனம்
கேளுங்கள்
செய்திகள்
புதிய வரவு

NOOLAGAM ILAKKIYAM
6, Mu. Va. St Arumbakkam,
Madras—600 106
PHONE : 484 5034

நூலகக் கல்வி

- தமிழ்ப் புத்தக விற்பனையைப் பெருக்கினால் நூலக இயக்கம், மக்கள் இயக்கமாக மலரும்.

- சங்கப் பலகை, இந்தப் பிரச்சனையை கையாள, களத்தில் காந்தி பிறந்த 1995 அக்டோபர், 2-ஆம் நாளில் குதிக்கிறது. நூலக தளபதி அப்பாஸ் இப்ராஹிம் தலைமை தாங்குகிறார்.

- நூலகக் கல்வி, தமிழ் மூலமே எல்லா நிலைகளிலும், C.L.S.; B.L.S.; M.L.S.; M.Sc.; M.Phil.; Ph.D. போதிக்கப்பட வேண்டும். இது 1996இல் நடைமுறைப் படுத்த, நூலகம் இலக்கியம் தொடர்ந்து செயல்படும்.

- தமிழ்ப் புத்தகங்கள் இல்லையே, போதிக்க ஆசிரியர் களுக்கு எங்கே போவது, என்று இனி சாக்கு போக்கு சொல்லாமல், சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண் டும். நூலகம் இலக்கியம் இதற்காக முழு மூச்சில், வீச்சில் செயல்படுத்த பாடுபடும்.

- நூலகம் இலக்கியமும் சங்கப்பலகையும் 'இரு குழல் துப்பாக்கியாக பயன் பட்டு நூலக இயக்க பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அனைவரும் கற்றவரே என்ற நிலையை உருவாக்கும்.

—ஞானியார்

வாழ்த்துச் செய்தி

திரு. இரா. கண்ணன், M.A.B.Ed.,
பொது நூலக இயக்குநர்
பொது நூலகத் துறை
தமிழக அரசு

சென்னை—2
நாள் : 21-8-95

அன்புடையீர்,

தங்களது "நூலகம் இலக்கியம்" என்ற மாத இதழ் பொது நூலகப்பணி வளர்ச்சி குறித்தும், புத்தகச் செய்திகள் குறித்தும் எழுத்தாளர்களின் புதிய படைப்புகளைக் குறித்தும் வெளியிட்டிருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி கொண்டேன். தங்களது முயற்சி மென்மேலும் வளர்ச்சி அடைந்து சமூகத்திற்கும் நூலகங்களுக்கும், நாட்டிற்கும் நல்ல பணிகளாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

ஒப்பம் இரா கண்ணன்
பொது நூலக இயக்குநர்

பெறுநர்;

டாக்டர். பா. பெருமாள்
M. A. M. Lib. sc., Ph. D.,
ஆசிரியர் நூலகம் இலக்கியம்,
6, மு வ தெரு, அரும்பாக்கம்,
சென்னை—600106.

பொது நூலகத்துறையின் வளர்ச்சி

இரா. கண்ணன், M. A.,B.Ed,
பொது நூலகத்துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு

கல்வியும் நூலகமும்

கல்வி வளர்ச்சிக்காக கடந்த நாற்பது ஆண்டுகளைக் காட்டிலும் சமீப காலமாக மாநில மற்றும் மத்திய அரசுகள், பல சீரிய திட்டங்களைத் தீட்டி முனைப்புடன் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றன. நடைமுறையில் உள்ள முறையான கல்வித திட்டங்களோடு, அனைவருக்கும் கல்வித்திட்டம், கட்டாயக் கல்வி, தொழிற் கல்வி, முறைசாராக் கல்வி, வயது வந்தோர் கல்வி என பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன. ஆயினும், பள்ளிக்கல்விக் குப்பின் கறற கல்வியை நிலை நிறுத்தவும், பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ளவும், படிக்கும் பழக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கான வழிவகைகள் செய்து தரவேண்டியது இன்றியமையாததாகிறது.

இக்கல்வி வெறும் எழுத்தறிவோடு மட்டுமன்றி தங்கள் எதிர்காலப் பொருளாதார வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளவதற்கும் உறுதுணையாக இருக்க வேண்டும். நல்ல வாய்ப்புக்களை படித்த மக்களுக்கு ஏற்படுத்தித் தருகின்ற இடங்கள் நூலகங்களே. இம்முயற்சியின் பலனாக நமது தமிழக அரசு ஊரக நூலகங்கள் ஏற்படுத்துவதற்கான முயற்சியினைச் செய்து வருகிறது. அதன்படி கூடிய விரைவில் கிளை நூலகங்கள் தமிழகத்தில் பெரும்பாலும் கிராமப்புறங்களில் திறக்கப்பட உள்ளன.

தமிழ்நாட்டில் பொது நூலகங்கள்

தற்போது, தமிநாட்டில், ஒரு மாநில மைய நூலகமும் (கன்னிமாரா பொது நூலகம்) 18 மாவட்ட மைய நூலகங்களும் 1538 கிளை நூலகங்களும் (Mobile Libraries)

இயங்கு நூலங்களும் மக்களுக்குப் பல வகையாலும் செயல்பட்டு சேவை புரிந்து கொண்டிருக்கின்றன.

கன்னிமாரா நூலகம்

சென்னை எழும்பூர் அருங்காட்சியகயத் திடலில் கவின் மிகு கட்டடத்தில் அமையப்பெற்ற இந்நூலகம், புது முறையிலமைந்த மற்றொரு கட்டடத்தையும் சேர்த்து சிறப்புடன் ''மாநில மைய நூலகம்'' என்ற பெயரைத் தாங்கிக் கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆங்கிலப்பகுதி, தமிழ்ப் பகுதி, பருவ இதழ்கள் பகுதி என மூன்று பகுதிகளையும் மூன்று தளங்களில் கொண்டுள்ளது. பாடநூல் பகுதி, குறிப்புதவி பகுதி, குடிமைப் பயிற்சி மையப் பகுதி, அயல் நாட்டு பருவ இதழ்கள் பகுதி என்று பல பகுதிகளைக் கொண்டு தினமும் பற்பல வகைகளில் பொது மக்களுக்கு பயன்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த நூலகத்தில் மொத்தம் ஆறு லட்சம் நூல்களுக்கு மேல் உள்ளன. கூடிய விரைவில் (1996) நூற்றாண்டைக் காண உள்ளது பொது நூலகத் துறையும் இதற்கு விழா எடுப்பதின் மூலம் பல புதிய திட்டங்களை மேலும் வாசகர்களுக்கு அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்டமைய நூலகங்கள்

தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்ட தலை நகரங்களிலும் மைய நூலகங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இம்மைய நூலகங்கள் சிறுவர் பகுதி, மகளிர்பகுதி பருவ இதழ்பகுதி, குறிப்புதவிப் பகுதி போன்ற பலப்பல பிரிவுகளைத் தாங்கி பொது மக்களுக்குச் சிறப்புற பணி செய்கின்றன.

சிறுவர் நூலகப் பிரிவுகளில் சிறுவர்கள் அமர்ந்து வாசிப்பதற்கேற்ற சிறிய நாற்காலிகள், வண்ணப்படங்களுடன் கூடிய நூல்கள் போன்றவை களால் அமையப் பெற்றுள்ளது சிறப்பானதாகும். மாவட்ட மைய நூலகங்கள் பொது மக்களுக்கு நூலகப்பணி செய்வதோடல்லாமல், அம் மாவட்டத்திலுள்ள எல்லா கிளை நூலகங்களுக்கும் புதிய நூல்களை முறையாக வழங்கும் பணியினையும் செய்து வருகின்றன.

கிளை நூலகங்கள்

தமிழகத்தில் மாவட்ட மைய நூலகங்கள் தவிர்த்த ஏனைய நூலகங்கள் கிளை நூலகங்களாக கருதப்படுகின்றன. இவைகள், நகரப் பகுதிகள், கிராமப்பகுதிகள் மற்றும் மலைப்பகுதிகள் போன்ற சிறப்புப் பகுதிகள்

ஆகிய எல்லா இடங்களிலும் விரிந்து,எல்லா நிலை மக்களுக்கும் உபயோகப்படுகின்றன.

இயங்கும் நூலகங்கள்

சில மாவட்டங்களில் பேருந்துகள் அமைப்பிலும் சில மாவட்டங்களில் சிறிய வேன்கள் அமைப்பிலும், இயங்கும் நூலகங்களின் மூலம், நூல்களை புறநகர் பகுதி வாழ் மக்களுக்கு இரவல் கொடுத்து பணியினைச் சிறப்பாகச்செய்து வருகின்றன.

பகுதிநேர நூலகம்

ஒருகிளை நூலகத்திற்குக் குறைந்த பட்சம் இரண்டு பகுதி நேர நூலகங்கள் என்ற அளவில் தொடங்கப்பட்ட திட்டத்தில், இதுவரை, தமிழகத்தில் 1100 பகுதிநேர நூலகங்கள் திறந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இலக்கை அடைய வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ப்படுகின்றன.

மருத்துவமனை நூலகம்

மருத்துவமனைகளில் பணி புரியும் பணியாளர்களுக்கு உதவும் வகையிலும், பிணியாளர்களாக சேர்ந்து,சிகிச்சை பெற, தங்கியுள்ளவர்களும் தங்கள் நோயின் தன்மையை மறந்து இருக்கும் பொருட்டும், விரைவில் பிணி நீங்கி சுகமாக திரும்பும்பொருட்டு உதவும் நூல்களை, பிரத்யேகமாக சில கிளை நூலகங்கள் பெற்று பணியாற்றுகின்றன.

குடியிருப்புப் பகுதி நூலகங்கள்

காவலர் குடியிருப்பு, வீட்டு வசதிவாரியக் குடியிருப்புகள், தொழிலாளர் குடியிருப்புகள் ஆகிய குடியிருப்புகளில், கிளை நூலகங்கள் அல்லது பகுதிநேர நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்படுகின்றன.

சிறைச்சாலை நூலகம்

''செய்த தவறுக்கு தண்டனை வழங்கப்படும் இடம் சிறைச்சாலை'' என்ற சித்தாந்தம் சிதைந்து' ''தவறு செய்தவர்கள் திருந்தும் இடம் சிறைச்சாலை'' என்ற நம்பிக்கை நிறைந்த காலமிது. ஆகையால் சிறையில் உள்ளவர்கள் தண்டனைக் காலத்தை வீணே கழிக்காமல் பயனுள்ள வழியில் படித்து, எதிர்கால வாழ்க்கையை வகுத்துக் கொளளும் பொருட்டு, அங்கேயும் கிளை நூலகங்கள் அல்லது பகுதி நேர நூலகங்கள் செயல் படுகின்றன.

வீடுதோறும் நூல்வழங்கும் திட்டம்

வயதான பெரியோர்கள், உடல் ஊனங்கள் ஏற்பட்டு நடக்க முடியாமலிருந்தாலும், மன ஊனமில்லாமல் படிக்க வேண்டும் என விழைபவர்

களும் வீட்டை விட்டு வெளியே பொது இடங்களுக்கு வர முடியாதவர்கள் ஆகியோர்கள் பயன்பெறும் பொருட்டு, அவர்கள இருக்கும் இல்லம் தேடி, நூலக ஊழியர்கள் உந்து வண்டி மூலம் அல்லது வேறு வகையில் நூல்களைக் கொண்டுசென்று விநியோகித்து பயன் பெறச் செய்துன்றனர்.

நிறுவனர் உறுப்பினர் முறை

இம்முறையின் கீழ், கல்வித் துறையின் கீழ் இயங்கும் நடு நிலைப்பள்ளி உயர் நிலைப் பள்ளி மேல்நிலைப்பள்ளி முதலிய கல்விக் கூடங்கள் அருகில் அமைந்துள்ள பொது நூலகத்தில் நிறுவனர் உறுப் பினராகச் சேரலாம். இதன் மூலம், தங்கள் பள்ளி நூலகத் தில் இல்லாத நூல்களை, பொது நூலகத்திலிருந்து பெற்று, தங்கள் பள்ளி மாண வர்களுக்கு, வழங்கி நூல்கள் பலவற்றை தொடர்ந்து படிக் கும் பழக்கத்தை மாணவர் களிடையே ஏற்படுத்தலாம் வேண்டிய எல்லா நூல்களை யும் வாங்க, போதிய நிதிவசதி இல்லாத பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மிகுந்த பொருட் செலவில், அருகில் உள்ள பொது நூலகத்தில் வாங்கி வைக்கப் பட்டுள்ளன. அரிய நூல்கள் மாணவர்களுக்குப் பரந்த அள வில் பயன்பட இத்திட்டம் வழி வகை செய்கிறது.

குடிமைப் பயிற்சி நூல் மையம்

சமீப காலங்களில், இந்திய ஆட்சிப்பணி (I.A.S.), இந்திய காவல் பணி (I.P.S.) போன்ற மத்திய பணியாளர் தேர்வாணை யம் நடத்தும் தேர்வுகள், தமிழ் நாடு பணியாளர் தேர்வாணை யம் போன்றவைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்வோர், மருத்துவக் கல்விக்கு நுழைவுத் தேர்வு, பொறியியல் கல்விக்குநுழைவுத் தேர்வு போன்ற தேர்வுகளுக்குத் தயார் செய்பவர்கள் பயன் பெறும் அளவில் அவர்களுக்கு வேண்டிய பாடங்கள் சப்பந்த மான அரிய நூல்கள் அடங்கிய குடிமைப் பயிற்சி நூல் மையங் கள்' பகுதி, பொது நூலகங் களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதோடு, பெருநகரங்களில் கிடைக்கக் கூடிய இந்நூல்கள், சிறு நகரங்களிலும் கிராமப் புறங்களிலும் கிடைப்பதரிது. கிராமத்தில் உள்ள ஏழை மாணவனும் பயனடைய வேண்டும் என்ற எண்ணத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்த குடிமைப்பயிற்சி 'கல்வி நூல் மையம்'' என்ற திட்டம் நல்ல முறையில் தொடங்கப்பட்டு, அதற்கான பயனுள்ள நூல் களைக் கொண்டு, சென்னை யில் கன்னிமாரா நூலகம், தேவ நேயப்பாவாணர் நூலகம், அசோக்நகர், ஷெனாய் நகர்,

அடையார் காந்தி நகர் வட்டார நூலகம், அயன் புரம், பாரதிதாசன் சாலை, நேரு பூங்கா, பெரியார் நகர் வட்டார நூலகங்களிலும், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, கோவை நகரங்களில் உள்ள மாவட்ட மைய நூலகங்களிலும் இப்பிரிவுகள் தொடங்கப் பட்டுள்ளன. இத்தேர்வுகளுக்கு படிப்போரின் மன நிலையை மனதில் கொண்டு இம்மாதிரி முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்மாதிரி மையங்கள் எல்லா மாவட்ட மையங்களிலும் விரைவில் துவக்கப்பட உள்ளன. பொது நூலகத்துறையில் இம்மாதிரி சிறப்பு மையங்கள் ஏற்படுத்துவது என்பது இந்தியாவிலேயே தமிழ் நாடுதான் முன்னோடியாகத் திகழ்ந்து வருகின்றது என்பதில் பெருமிதம் கொள்ளலாம்.

நூலகக்கட்டிடம்

சொந்தக் கட்டிடம் இல்லாத நூலகங்களுக்கு பல ஊர்களில் காலிமனைகள் பெறுவதற்கும், பல ஊர்களில் காலி மனைகள் பெறப்பட்டு கட்டுமானம் செய்யும் முயற்சிகள் நடைபெறுகின்றன. மேலும் காலிமனைகள் பெறப்படாத ஊர்களில், காலிமனைகளை பெறுவதற்கு பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புரவலர்கள்

ஊர்தோறும் கோவில்களையும் அன்னதான சத்திரங்களையும் ஆதிகாலந்தொட்டே ஆரம்பித்து, பராமரித்து பயன்படுத்தி வரும் நாடு தமிழகமாகும். சாதி, மதம், இனம் மொழி ஆகியவை கடந்து மனித சமூகத்திற்குப் பயன்படுவது நூலகம்.

நல்ல மனம் உள்ளவர்களை நூலக இயக்கத்தில் ஈடுபடுத்துவதே 'புரவலர் திட்டம்'

மறுமலர்ச்சி தகவல் மையம்

மேற்கண்டவாறு, நூலகங்கள் சமூகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, பொது அறிவு நூல்களை அதிக அளவில் படிக்க வைப்பதன் மூலமும், நவீன சாதனங்களின் மூலம், நூலகம் இன்று பயனுள்ள தகவல் மையமாக மாறி வருகிறது.

21-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் பொது நூலகத் துறையின் கீழ் செயல்படும் நூலகங்கள் ஒவ்வொன்றும் சொந்தக் கட்டிடத்தில் இயங்கும் என்பதோடு பல முக்கிய நூலகங்களில் கணிப்பொறிகள் புகுத்தப்பட்டு, பயன்டுபத்தப்படும்.

கணிப்பொறிகள் மூலம் தகவல்களை 'நேர்முகமாகப் பெற வாய்ப்புகள் பெருகிவருகின்றன.

நூலகப்பணி தொடர்ந்து மக்களுக்குப் பயன்படும் வகையில் பணி செய்வதே அறப்பணியாக நூலகத்துறை செய்து வருகின்றது. பொது நூலகங்களைப் பயன்படுத்தி சிறப்புப் பெறவும் பயன்பெறவும், தமிழக மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிரபல ஓவியருக்கு மத்திய அரசு பாராட்டும் பரிசும்

-மாலவன்

கவிஞர் எஸ். ஆர். ஜி. சுந்தரம் எழுதிய "பாப்பா மகிழ பத்துக் கதைகள்" குழந்தைகள் நூலின் முகப் போவியம் வரைந்தமைக்காக மத்திய அரசு அமைப்பான N.C.R.T. 93-94 ஆம் ஆண்டுக் கான பரிசினை அளித்துப் பாராட்டி, கௌரவித்தது.

நாடறிந்த இந்தக் கவிஞ ரின் ஏழு கவிதைத் தொகுப்பு கள் இதுவரை வெளிவந்துள் ளன

தமிழுக்கு, 'ஐக்கூ' கவிதை கள் படைத்து முதன் முதலில் நூலாக வெளியிட்ட பெருமை இவரையே சாரும்.

இவர்தம் கவிதைகளை ஆய்வு செய்து இதுரை மூன்று மாணவர்கள், பல்கலைக் கழக 'எம்ஃபில்' பட்டம் பெற்றுள்ள னர்.

இவரின் வயது ஐம்பத்து ஏழு. அது சரி ஓவியக் கவிஞருக்கு ஏது வயது!



ஓவியக் கவிஞரின், இந்த புத்தகக் கவிதையை படித்துச் சுவையுங்கள்.

புத்தகங்கள்
இரண்டு வகைப்படும்
ஒன்று
அச்சடித்த புத்தகம்
மற்றொன்று
நோட்டுப் புத்தகம்
ஆமாம் நீங்கள்
அச்சடித்த புத்தகமா?
நோட்டுப் புத்தகமா?

அமுத பாரதியின் —**உதய காலங்கள்** என்ற நூலிலிருந்து

சிறந்த தமிழ்ப் பதிப்பாளர் விருது

கருடாழ்வார்

சென்ற ஆண்டின் சிறந்த தமிழ்ப்பதிப்பாளர் விருது, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சியாளர், இரா. முத்துக் குமாரசாமிக்குக் கிடைத்துள்ளது. சிறந்த இந்திய மொழிப்பதிப்பாளர்களுக்கு இந்தியப் பதிப்பாளர் சம்மேளனம் வழங்கும் இந்த விருது ஏப்ரவில் தில்லியில் நடந்த இந்திய மொழிப் பதிப்பாளர்களின் 3 நாள் மாநாட்டில் வழங்கப் பட்டது.

இரா. முத்துக் குமாரசாமி
ஆட்சியாளர், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

தமிழறிஞர்கள் மற்றும் தமிழாசிரியர்களுக்கும், தமிழ் மாணவர்களுக்கும் உறுதுணையாய் இருக்கும் சென்னை மறைமலையடிகள் நூலகத்தை 1958-இல்இவர் உருவாக்கினார்.

அந்நூலகத்தை நடத்தி வரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புப் பணிகளிலும் பங்கேற்ற இவர், அதன் ஆட்சியாளர் வி. சுப்பையா பிள்ளை மறைவுக்குப் பின் அப்பொறுப்பை ஏற்றார்.

கடந்த 15 ஆண்டுகளில், இரு நூறுக்கும் மேற்பட்ட புதிய நூல்களை வெளியிட்டுள்ளார்.

இன்று தமிழ் நாட்டின் எல்லாத் தரப்பு நூலகர்களின் ஏகோபித்த, பொதுவான நூலகத் தலைவராக விளங்குவது இவரின் இனிய பண்பினை விளக்குறது.

நூலகத் தந்தை

இரா. முத்துக்குமாரசாமி
எம். ஏ. பி. லிப். எஸ். சி.

இந்தியாவில் நூலக இயக்கம் இவ்வளவாவது சிறப்பாக இருக்கிறதென்றால் இதற்கு அடிப்படைக் காரணமானவர் 'நூலக இயக்கத் தந்தை' என்று போற்றப் பெறும் டாக்டர். எஸ். ஆர். ரங்கநாதன் அவர்களே.

நூலக இயக்கத்தில் இரு பெரும் பிரிவுகள் உள்ளன. ஒன்று பல்கலைக் கழகம், கல்லூரி, பள்ளிக்கூட நூலகங்கள் என்று சொல்லலாம்.

மற்றொன்று, தேசிய நூலகம், மாநில மைய நூலகம், மாவட்ட மைய, கிளை நூலகங்கள்; இவற்றைப் பொது நூலகங்கள் என்று குறிப்பிடலாம்.

கல்விக் கூட நூலகங்களாவது தேவை கருதி, தாமே தோன்றியிருக்கலாம், வளர்ந்திருக்கலாம். ஆனால், **பொது நூலக இயக்கம் திரு. ரங்கநாதன்** இல்லையேல் தோன்றியிருக்காது இது திண்ணம்.

கல்விக்கூட நூலகங்களும் தோன்றியிருக்கலாம். ஆனால் அவற்றைச் செம்மையாக நடத்தும் ஆற்றலுடைய நூலகர்கள் ரங்கநாதன் இல்லாவிடில் தோன்றியிருக்க மாட்டார்கள். ஏனெனில், சரங்நாதன்தான் முறையான நூலகக் கல்வியை, மேலை நாடுகட்கு இணையாக, இந்தியாவில் அறிமுகப்படுத்தியவர்; வளர்த்தவர்.

எனவே நூலகம் அமைய, நூலகர்கள் உருவாக நூலக இயக்கம் மலரக் காரணமாக இருந்தவர் டாக்டர் திரு. ரங்கநாதன் மட்டுமே என்று துணிந்து கூறலாம்.

எனவேதான் அரசு அன்னாருக்கு ராவ்சாகிப், பத்மஸ்ரீ போன்ற விருதுகளை வழங்கியதுடன் நில்லாமல், அவருடைய 73வது வயதில் முதன் முதலாக நூலக இயல் ஆராய்ச்சிக்கு அவரைத்தேசியப் பேராசிரியராக நியமித்தது.

அவர் மறைந்து இருபது ஆண்டுகள் கழிந்து விட்டன. உண்மையிலேயே அவருக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் திகழ்ந்தார் என்பது புலப்படுகின்றதல்லவா?

இவ்வளவு பேராற்றல் படைத்தவரைப்பற்றி, நூலகத் துறை முன்னோடியைப் பற்றி இதுவரை தமிழில் நூல்களே வெளிவராதது பெருங்குறை, அதனைப்போக்க முற்பட்டுள்ள புதுவை ரோமன் ரோலண்டு நூலகத்தின் தலைமை நூலகர் திரு. கே. சௌந்தர் ராஜன் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

அவரும் ஒரு தலைசிறந்த நூலகர் என்பதால்தான் நூலககப் பேராசிரியரைப்பற்றி நண்குணர முடிந்திருக்கின்றது. பேரறிஞரின் வாழ்வில் நிகழ்ந்த பல்வேறு நிகழ்ச்சிகளையும் நமது இந்தியாவில் நூலக இயக்கம் பரவ ரங்கநாதன் என்னென்ன முயற்சிகளைமேற்கொண்டார் என்பதையும் சுருக்கமாக அவர் எழுதியுள்ளார். ஆற்றொழுக்கான நடை; படிப்பதற்கு இனிமை தருகிறது.

நாட்டுக்குழத்த நல்ல மனிதருக்கு அவர் பிறந்த தாயகத்திலேயே **புறக்கணிப்பு** நிலை ஏற்பட்டதை, மாநில நூலகக் குழு கூட்டதில் நடந்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளார். இதைவிட, அவரே உருவாக்கிய பல்கலைக்கழக நூலகத்திருந்து அவர் எவ்வாறு பணியிலிருந்து விடுவிக்கபபட்டார் என்ற செய்தியைக் கேட்பவர்கள் வருந்துவார்கள்.

ஆனால், இத்தனைப் புறக்கணிப்பையும் அவர் பொருட்படுத்தாது, எந்தப் பல்கலைக் கழகம் அவரை உதறித் தள்ளியதோ அதே பல்கலைக்கழகத்திற்குத் தாம் வாழ் நாள் முழுவதும் ஈட்டிய ஓர் இலட்ச ரூபாயை நன் கொடையாகக் கொடுத்தாரென்றால், அவர் எவ்வளவு பெரிய மாமனிதர்! தமது பெருந்தன்மையை இக்கொடையின் மூலம் உலகுக்கு உணர்த்தி விட்டார் அல்லவா?

இத்தகைய பெரியாரின் வரலாற்றை அவருடைய நூலக நூற்றாண்டுவிழாவையொட்டி வெளியிட்டுள்ள நூலாசிரியர் நூலகர் திரு சௌந்தர் அவர்களை அனைவரும் பாராட்ட வேண்டும்.

தமது வழக்கம் போல, எந்த நூலானாலும் எவ்வளவு செலவானாலும், நூல் விற்கிறதோ இல்லையோ, தமிழக அரசு வாங்குகிறதோ இல்லையோ, எதைப் பற்றியும் கவலைப் படாமல்,கையிருப்புப் பணம் சிறிதே ஆயினும் அதையும் பதிப்புத்தொழிலில் முடக்கி விட்டு, வாழ்க்கையின் வசந்த காலக் கனவுகளை எண்ணங்களிலே மட்டும் சுமந்து வாழும் பதிப்பாளரும், பதிப்புத்துறையிலுள்ள அனைவர் சார்பிலும் அவ்வப்போது உருமைக்குரலை உரத்தகுரலில் எழுப்புபவருமான திரு. வெள்ளையம்பட்டு சுந்தரம் அவர்களையும் மனமுவந்து பாராட்டுவதில் பெருமகிழ்ச்லயடைகிறேன்.

நூலக அறிவு சாலவும் பெரிது!

முதல் தமிழர்

சி. மெய்யூரான்

அகில இந்திய அளவில் இவ்வாண்டின் சிறந்த நூலகராக தமிழ்நாட்டைச் சேர்ந்த நூலகர் ஒருவர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

அண்மையில் கோவாவில் நடைபெற்ற I.L.A. நூலகர்கள் மாநாட்டில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் குமரகுருபரர் கல்லூரியினைச் சேர்ந்த நூலகர் பி.கல்யாணசுந்தரம் சிறந்த நூலகருக்கான விருதை பெற்றுள்ளார்.

கல்யாணசுந்தரம் தனது வருமானம் அனைத்தையும் குழந்தைகளுக்காகவும் நூலகப்பணிகளுக்காகவும் செலவிட்டு வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது

புத்தகச் செய்தி

தென்கச்சி **கோ. சுவாமிநாதன்**

"ஏன் சார்? இது என்ன வீடா லைப்ரரியா?"

"ஏன் அப்படிக் கேக்கறீங்க"?

"எந்தப் பக்கம் பார்த்தாலும் புத்தகமா அடுக்கி வச்சிருக்கிங்களே... அதனாலே கேட்டேன்!"

"எனக்கு வயத்துப்பசியைவிட அறிவுப் பசி அதிகம்! அது தான்... ஹி... இப்படி! எனக்கு சோறு வேணாம் சார்... புத்தகம் இருந்தா போதும்! புத்தகத்தோட வேல்யூ என்னங்கறது எனக்குத்தான் தெரியும!"

"உங்களை மாதிரியே ரஷ்யாவுலேயும் அதோட வேல்யூ தெரிஞ்சவங்க சில பேர் உண்டு போல இருக்கு!"

"என்ன சொல்றீங்க?"

"மாஸ்கோ பல்கலைக் கழக நூலகத்துலே மூணு கோடி ரூபாய் பெறுமானமுள்ள புத்தகங்கள் திருட்டுப் போயிட்டு தாம் சார்! ராத்திரியிலே (12-12-92) புகுந்து அங்கே இருந்த பெண் ஊழியரைக் கட்டிப் போட்டுட்டு புஸ்தகங்களை எடுத்துகிட்டுப் போயிட்டாங்களாம்! ரஷ்யக் கவிஞர் அலெக்சாண்டர் புஷ்கின் எழுதிய புத்தகம்லாம் அதுலே இருந்துதாம்! இந்தக் கொள்ளையிலே 5 பேர் சம்பந்தப்பட்டிருக்கிறதாகத் தெரியுதாம்! ஒருத்தரைமட்டும் கைதுபண்ணியிருக்காங்களாம்!"

"அந்த ஊர்லே புத்தகங்களைத் திருடறாங்க! நம்ம ஊர்லே வேறே மாதிரி செய்யறாங்க!"

"எப்படி?"

"இரவலா குடுன்னு வாங்கிக்கிட்டுப் போவாங்க! அப்புறம் திருப்பிக் குடுக்கறதே இல்லே! அதனாலே நான் எல்லாருக்கும் ஓர் அட்வைஸ் பண்றதுண்டு! அதையே உங்களுக்கும் சொல்ல விரும்பறேன்!"

"சொல்லுங்க!"

"எப்பவுமே புத்தகங்களை இரவல் கொடுக்காதீங்க...! அது திரும்பாது!"

"உங்ககிட்டே இவ்வளவு புத்தகங்கள் இருக்கறதுக்கு அது காரணமா?"

"ஆமாம்! இவ்வளவும் நான் இரவலா வாங்கினது!"

—நன்றி கல்கண்டு

நூலகத் தந்தையின் கடைசி ஆசை

1. You speak of a new library bulletin in Tamil 'நூலகர் ஓலை' to be published as a bulletin of the Tamil Nadu Librarions,
2. I again repeat my humble request and suggestion that this division and multiplication need not be thought of.
3. I repeat my old reqest that the Madras Library Association-the name may me be changed into Tamil Nadu library Association, in the proper constitutional way—used as the one and the only one organisation of Tamil Nadu for the promotion of all kinds of library work. When we started the Madras library Association in 1928 none of us, the founders had any notion that forces would develop in Tamil Nadu asking for rival bodies being set up.
4. This is not a political organisation inducing different political Parties to have different associations of their own, to guide their axes.
5. On the other hand, this is only a nation building organisation for the contineous social up lift of our people.
6. Is it necessary to have rival bodies set up for this purpose?

7. I had been appealing about this but unfortunately these words seem to carry no weight whatever.

8. I wish that now atleast my words would be heeded to and the entire library interests and activities of Tamil Nadu are radiated and get irradiated by the 44 /70 years old association. To my knowledge neither I nor any of my old colleagues had ever thought of any but global lines, for its development. I wish this tradition of ours is kept up, although we have all become too old to come and stand by your side and continue to do as muchwork as we used to do when we had the necessary strength Still our younger successors having continued loyalty to the association are doing even better than us in helping the library cause of the library profession of Tamil Nadu.

I can take you in to my confidence, I can assure you that you will see sooner or later, that the very event which you propose to celebrate at the end of this month was due to the intiative and to the untiring pursuit of a represen tative of the Madras Lib Assn. I had been following up this event since it got started.

I wish that the urge to put up rival bodies be dropped and that what ever you did—the inheritors of us old people —will be done in the name and from the platform of that very Madras Lib Assn. Please let me have a line of assurance on this point.

With our best wishes

Yours Sincerely
S. R. Ranganathan

பதிப்புச் செம்மல் தமிழவேள் டாக்டர் ச. மெய்யப்பன

பேராசிரியர் மது. ச. விமலானந்தம்

பிறப்பும் கல்வியும்

குங்கிலியம் பழ. சண்முகனார் மீனாட்சி ஆகிய இரு முதுகுரவர்க்கு இராமச்சந்திரபுரத்தில் 21-6-1933இல் மூத்த மகனாகப் பிறந்தவர்தான் நம் மனக்கினிய மெய்யப்பனார் அவர்கள். திரு. மெய்யம் இறைவன் பெயரினை இடும் மரபில் இவருக்கு இட்ட பெயர் சத்தியமூர்த்தி.

தொடக்கக்கல்வி உள்ளூர் பூமீசுவரர் உயர்நிலைப்பள்ளியிலும் உயர்நிலைக்கல்வி கருமுத்து தியாகேசர் பள்ளியிலும், கல்லூரிப் படிப்பு அழகப்பா கல்லூரியிலும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் படித்தார்.

அரிய தமிழ் வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 1954-57-இல் பயின்று 57இல் ஆசிரியப் பணியில் அமர்ந்தார். பிற்காலப் பெருவாழ்வுக்கும் புகழுக்கும் எல்லாம் ஊற்றாக - வாய்ப்பாக அமைந்தது இப்பல்கலைப் பணியே! 36 ஆண்டுகள் பணியாற்றி 1993-இல் ஓய்வு பெற்றார். 'அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு அணி; இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு அணி.'

அண்ணாமலையின் அரும் சூழல் இவரை ஆளாக்கியது; அறிஞர்தம் தொடர்பும், ஆன்றோர்தம் பொழிவும், சான்றோரின் காட்சியும் இவரை மாட்சிமைப்படுத்தின. இவரது ஏற்றமிகு வாழ்வினுக்கு அண்ணாமலையே அச்சாணி. பாவாணர் பழக்கம், தமிழின் அடிப்படை அறிய, வேர்ச் சொல் உணர வழி கோலியது. தனித்தமிழ் ஈடுபாடு ஏற்படச் செய்தது. மு. அண்ணாமலையாரின் நெருக்கம் இவரைக் கூர்மைப்படுத்திற்று மூதறிஞர் வ.சுப. மாணிக்கனாரிடம் பணி செய்தபோது, தம் தமிழ் வாழ்வுக்கு வழி காட்டியாக அவரை வரித்துக் கொண்டார்.

நல்லாசிரியர் : இவர்தம் வகுப்புகள், காலட்சேபங்களாக அமையாமல் கருத்துக் கூடங்களாக விளங்கும். புதிய செய்திகளைப் புத்துணர்வுடன் சுடச்சுடத் தந்திடுவார். வெளிவரும் புது நூற்களின் புதுமைகளைப் புகன்றிடுவார்.

இவர் வகுப்பில் தமிழ் களிநடம் புரியும். சமூகப்

பிரக்ஞையுடன்-ஆய்வு வேட்கையோடு கற்பிக்கும் ஆற்றலர். கற்பித்தலில் புதிய உத்திகளைக் கையாண்டு மாணாக்கரிடையே எழுச்சியும் மலர்ச்சியும் ஊட்டும் விரகர் மாணவர் மகிழ்ந்து மதித்துப் போற்றுமாறு அவர் உள்ளங்களில் உறையும் ஆசான்.

நூலாசிரியர் : பன்னூல் படைத்தவராக அமைகிறார். பதினாறு நூல்களின் ஆசிரியர். இவரது 'தாகூர்', தமிழக அரசின் முதற் பரிசினைப் பெற்ற தரமான சிறந்தநூல். 'தில்லைத் திருக்கோயில்' என்னும் நூல் ஆங்கிலம், இந்தி மொழிகளிலும் பெயர்க்கப்பட்டு ஆயிரக்கணக்கான படிகள் அச்சானமை அறியத்தக்கது.

பதிப்பாசிரியர் : பேராசிரியராகவும் நூலாசிரியராகவும் விளங்கும் மெனா அவர்கள் 1960 முதல் சிறந்த பதிப்பாசிரியராகவும் விளங்குகின்றார். மணிவாசகர் நூலகத்தின் வளர்ப்புத் தந்தை படத்துறையில் மெய்யப்பர் என்றால், மேலாம் பதிப்புலகில் மெய்யப்பர் இவரே (சோம இளவரசு) பதிப்புக்கலையின் பகலவன்; ஆயும் மதிப்புக் கலையின் பதியாம் (இளங்குமரன்). உண்ணாதிருப்பார், உறங்காதிருப்பார். பேசாது கூட இருப்பார்; ஆனால் நூல் வெளியீடு நினையாதிரார்; பதிப்புப் பற்றிச் சிந்திக்காதிரார். துறைதொறும் தமிழுக்குப் புத்தம் புது நூல்கள் வெளியிட வேண்டும் என்ற வேணவா மிக்கவர். உயர் நூல்கட்குரிய பொருட்களைத் தேர்ந்து, உரிய ஆசிரியர்களைத் தேடிக் கண்டு, திட்டம் வகுத்து, பன்முறை கலந்துரையாடி, மிகச்சிறந்த நூல்கள் பயவற்றை உருவாக்கிய பெருமையர். சில துறைகளில் முதல் நூல்கள் வெளியிட்ட முதன்மையர்; சுற்றுலா, சிற்றிலக்கியம், நாட்டுப்புறவியல். மக்கள் தொடர்பு, மானிடவியல், பண்பாட்டியல் போன்றன சான்றாம்.

'உரையாசிரியர்கள்' (மு. வை. அரவிந்தன்), 'தமிழ் நூல் தொகுப்புக் களஞ்சியம்' (சுந்தர சண்முகனார்), 'இந்திய வேளாண்மை.' 'இந்திய அரசியலமைப்பு' (தில்லை நாயகம்), 'தமிழ்மொழி வரலாறு', 'நூறு ஆண்டுத் தமிழ் உரைநடை' 'நாட்டுப்புற ஆய்வு,' (சக்திவேல்), 'நாவல் வளர்ச்சி' (மோகன்), சங்க இலக்கிய ஆய்வுகள்' (அமிர்தலிங்கம்) போன்ற பெருநூல்கள் கொணர்ந்த பெருமையர்,

அகராதி வரிசை, சிற்றிலக்கிய வரிசை, திருக்குறள் வரிசை, திருக்கோயில் வரிசை, நாட்டுப்புறவியல் வரிசை, மொழியியல் வரிசை, வள்ளலார் வரிசை. நகரத்தார் கோயில் வரிசை, உலக நூல் வரிசை என்ற வரிசை நூல்களை வரையாது வழங்கும் வலிமை இவரின் வெளியீட்டுத் திறத்திற்குக் கட்டியம் கூறும்.

பொழிஞர் : மெனாவோ நல்ல ஆசிரியர். சிறந்த நூலாசிரியர், உயர்ந்த சொற்பொழிவாளர்.

சிந்தித்துப்பேசுவார். சிரிக்கப் பேசுவார். அவையறிந்து பேசுவார். சுவையாகப் பேசுவார்,

'மேடை நீ ஏறிவிட்டால், மெய் மறந்து கேட்பதுண்டு! சல சலப்பு எல்லாம் மாறும். கல கலப்பு அரங்கமாகும்! பேச்சுத் தமிழ்அங்கே புத்தாடை உடுத் தும்! அதிகம் நீ பேசமாட்டாய், அளவுடனே பேசிடுவாய்' (குழந்தைக் கவிஞர் குழ. கதிரேசன்).

உரையாடல் வல்லார் : உரை யாடுவது ஒரு கலை. பேசுவது வேறு. அளவளாவுதல் வேறு. பேசவது, ஒரு வழிப்பாதை உரையாடுவது இருவழியது. இதற்கு அன்பு, அறிவு, படிப்பு, பல்துறை அறிவு கனிவு, பணிவு, வாதிடும் வளம், பதில் தரும் பாங்கு எல்லாம் வேண்டும்.

சொல்லாய்வர் : பாவாணர் கூட்டுறவு, மாணிக்கனார் நல் லுறவு இளங்குமரனார் நட் புறவு, இவரை இவ்வழியில் உந்தின. சொல் ஆய்விலும் — ஆக்கத்திலும் ஊக்கம் மிகுந்த வர். நாளும் வழக்கில் வரும் புதிய சொற்களைத் தொகுத்து, 'பழகுதமிழ்ச் சொற்கள் 10,000' எனப் பகுத்து வகுத்துள்ளார்.

பயணம் ஒரு பட்டறிவு. பெருங்கல்வி, மண்ணை, மக்களை, மொழியினை, பண் பாட்டினை, நாகரிகத்தை நன்குணர உதவுவது இவர் நாற்பது ஆண்டுகளாகத் தமிழ கம் முழுதும் பயணித்துள்ளார். இவர் செல்லாத ஊரில்லை. கால்படாத இடமில்லை.

விடுமுறையில் வீட்டில் தங்கார். இதை நன்குணர்ந்த தங்கை சூடி ஆச்சி,

'காலையிலே கோவை, கடும்பகலில் மாமதுரை

மாலையிலோ சென்னை நகர், மதியெழுந்தால் சிதம்பர மாம்' என்றார். கு. வெ. பால சுப்பிரமணியரோ,

'தில்லையிலே ஓர்கால், திருச்சியிலே மற்றோர்கால்.

நெல்லைக்கும் சென்னைக் கும் நேருங்கால்—செல்லுங்கால்

கூடல்திருப்பூர் குறுகுங்கால் மெய்யப்பன்

ஓடிஉழைத்த உயர்வு' என்பார்.

நட்புச் செல்வர் : நண்பர் களைப் பெறுவது ஒரு தனிக் கலை. நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறிலலை என்ற நோக்கில், நான்கு திசையிலும் நண்பர்களைப் பெறறவர் நம் மெனா. நண்பர்கள் தோன்று வர்—மறைவர், புது நண்பர்கள் வரவரப் பழைய நண்பர்கள் போய்விடுவர்; இதுவே பலரின் அனுபவம். ஆனால் மெனாவி டம் பழகியவர் பிரியார்.

நூலகம் : பயிலும் நாள் தொடடு, எந்த நூல் வந்தா லும், உடனே வாங்கிப் படித் துக் கோடிட்டு வைத்திடுவார். இரண்டு படிகள் வாங்கிடுவார், ஒன்று தொலையினும் ஒன்று இருக்குமல்லவா? செல்லும் போதெல்லாம் வெளியீட்டகங் களைதேடிச்சென்றுபுது நூல்க்ள் வாங்கிப் போற்றுவார்;புத்தகக் கண்காட்சி எங்கு நடப்பினும்

சென்று சுழன்று புத்தம் புது நூல்களை வாங்கிடுவார். இப்படியாக இவரிடம் சேர்ந்தவை: 12,000 நூல்கள்.

வாங்கும் நூல்களை வைகறைப் போதிலும் பயணத்திலும் படித்து முடித்திடும் சிறந்த வாசகர் (Voractious reader) என்பது மனங்கொள்ளத்தக்கது.

கொடைஞர் : பணம் சேரச் சேரப் பணப பற்றும் ஓங்கும் பணம் இருப்போரிடம் மனம் இராது. பணம் சேரச் சேரக் குணம் குறையும். மாறும். மெனா இதில் சிக்கிச் சிதறாதவர். 'செல்வத்து பயனே ஈதல்' (புறம்) என்பதை அறிந்தவர்.

பொருட்கொடை மட்டுமன்று. நூற்கொடையும் புரிகிறார். திருமணங்களுக்கெல்லாம் பயன் மிகு பனுவல்கள் அளித்துக் களிப்பது இவர் இயல்பு. வெற்றிச் சிந்தனைகள் ஒரு லட்சம். பட்டினத்தார் பாடல் 10,000, புதிய ஆத்தி சூடி 15,000, குறள் நூறு, கந்தர் சஷ்டிக் கவசம், சண்முகக் கவசம், தமிழ் வழிபாடு என ஆயிரக்கணக்கில் அச்சிட்டு அவல் பொரி கடலைபோல் வழங்கி மகிழ்கிறார். இவர் அன்பளிப்பு நூல்கள் இல்லாத இல்லங்களே இரா, நாடு, மொழி, இனம் வாழ்வு, கல்வி பற்றிய சிறு வெளியீடுகள் ஏராளம்.

வெற்றிச் சிந்தனைகள் ஒவ்வொருவர்பையிலும்—கையிலும் இருக்கும். இப்படி யாரும்—எந்தப் பதிப்பகமும் இவ்வளவு நூல்களை வாரி வழங்கியதில்லை! இதன் விளைவோ தாக்கமோ, பெரிது — மிகப் பெரிது இப்படி மெனா செட்டி நாட்டுவள்ளல்கள் வரிசையில் வருகிறார்.

தமிழ் முழுதறிந்தவர் என்பதால் மெனா ஒரு மேன்மையான வாழ்வினை வாழ்ந்து வருகிறார். வாழ்க்கையில் உயர்ந்த இலட்சியங்களை எய்தப் பெருநதிட்டங்களைத் திட்டிச்செயறப்பட்டு வருகிறார். இலக்கு (end) மட்டுமல்ல; வழி (Means) தூயதாக இருக்க வேண்டும் என்கிறார். குறிமட்டுமன்று, நெறியும் நேரியதாக இருந்திடவேண்டும்என்பார்.

வழிகாட்டிகள் : இப்படியெல்லாம் ஏற்றமிகு எழில் வாழ்வு வாழ்வதற்கு இவருக்கு வழிகாட்டிகள், இவர் சமூகத்திலேயே வாய்த்துள்ளனர். பெற்ற தந்தை, வாய்த்த மற்றொரு தந்தையாம் மாமனார் இருவரும் வசிட்டரும் விசுவாமித்திரரும் போலே, இவர் வாழ்வாம் ஆற்றின் இரு கரைகளாக இலங்குகின்றனர்.

அறக்கட்டளைகள் : 1. சண்முகனார் மெய்யப்பன் அறக்கட்டளை (அண்ணாமலை). 2. மாணிக்கனார் மெய்யப்பன் அறக்கட்டளை (புதுவைப்பல்கலை) 3. மெய்யப்பன் அறக்கட்டளை (தமிழ்ப் பல்கலை) 4. மெய்யப்பன் அறக்கட்டளை (திருவேங்கடவன் பல்கலை) 5. பெய்யப்பனார் அறக்கட்டளை (அழக பா பல்ககலை) 6. மூதறிஞர் வ. சுப. மா. நிதியம் (அண்ணாமலை), 7. தமிழ் எழுத்தாளர் நலநிதி (தமிழ்

எழுத்தாளர் சங்கம்). 8 பிருந்தாவன் கல்விக் கழகம். (கோவை), 9. சன்மார்க்க சபை (மேலைச்சிவபுரி), 10. தனித்தமிழ் இலக்கியக்கழகம் (பாளையங்கோட்டை), 11. அண்ணா இலக்கியப்பேரவை (சென்னை), 12. அனைத்திந்திய கண்ணதாசன் மன்றம், 13 முத்தப்பர் கோட்டம். 14. தமிழ் கற்றல் இதழ் நிதி, 15. நகரத்தார் ஐக்கிய சங்கம். 16. நகரத்தார் கட்டிட நிதி (மதுரை), 17 புதுக்கோட்டை கம்பன் கழகம். 18. முகம்—இதழ் நிதி, 20 - 25. நெல்லை, விழுப்பரம், அம்பத்தூர், நாகை, மேலைச்சிவபுரி நகரத்தார் சங்கங்கள். 26-27 ஆத்தங்குடி, அரிமழம் குடமுழக்கு என 30க்கும் மேற்பட்ட அறக்கட்டளைகள். கொடை நீள்கின்றது.

மூன்றுஉணர்வுகள் : 1 தமிழ் உணர்வு 2. சமூக உணர்வு 3. தொழில் உணர்வு. இந்த முப்மையில்-முக்கோணத்தில் இவர் வாழ்வு விளங்கி வருகிறது என்கிறார், இந்த மூன்றும் ஒன்றிய வாழ்வே மெய்யப்பர் வாழ்வு.

1. **மொழியுணர்வு** : மொழி ஒருவர்க்கு விழி. தமிழ் தமிழனுக்கு உயிருக்குநேர். நம்மை வாழ வைக்கும் தமிழுக்கு நம்மாலாவன செய்வது நம் தலையாய கடமை அல்லவா?

மெனாவின் தமிழ் உணர்வும் ஊற்றமும் நிறைந்ததமிழ்ப்பணி பாராட்டுமாறு உள்ளது. 1940களிலேயே கவியோகி சுத்தானந்த பாரதியின் 'பராசக்தி அர்ச்சனை' நூலினை வாங்கித்தம் இல்லவிழாவில் வழங்கியுள்ளார். 48 இலேயே தம் கடியாபட்டி வீட்டினுக்கு 'தமிழ் இல்லம்' எனப் பெயரிட்டுள்ளார்.

2. **தனித்தமிழ்வீறு** : தனித்தமிழ் மறவர் மொழி ஞாயிறு பாவாணர் வழியில், மூதறிஞர் மாணிக்கனார் நெறியில் நின்று பேச்சு, எழுத்து, பதிப்பு, பதிப்பக நிருவாகம் அனைத்திலும் தனித்தமிழ் தவழ்ந்திடவே செய்துள்ளார். தம் பெயர் சத்தியமூர்த்தியை மெய்யப்பன் என மாற்றிக் கொண்டது எண்ணுக. தனித்தமிழ் இயக்க வரலாற்றினை நூலாகவும் வெளியிட்டுள்ளார்.

3 . **தமிழிசை** : பல்கலையில் பயின்ற பணியாற்றிய மெனாவுக்கும், தமிழிசை இயக்க ஈடுபாடு ஏற்பட்டது. இசைத் தமிழ்க் கல்லூரி தோற்றிய மூலவர்—உற்சவர்கட்கெல்லாம் நன்றி பாராட்டும் வகையில் தம் பங்களிப்பினைக் காட்டும் வகையில் 'தமிழிசை இயக்கம்' நூலும் வெளியிட்டுள்ளார்.

4 . **குறட்பணி** : குறள் பரவும் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டவர் மெனா. குறள் மாநாடுகள். விழாக்களில் தவறாது கலந்து கொள்வார்.

5. **ஆட்சிமொழி** : 'தமிழே தமிழகத்தின் ஆட்சி மொழி' என ஆணை பிறப்பித்து ஆண்டுகள் பலவாகியும் செயற்படாது அப்படியே கிடப்பில் உள்ளமை சுட்ட 17-5-93இல் தலைநகர் தமிழ்ச்சங்கம் பெரும் போராட்டம் நிகழ்த்தியது மணிவிழாப் பணிகள் உள்ளமை எண்ணாது; போராட்டத்தில் குதித்துச் சிறை சென்று தம்தாகத்தையும் வேகத்தையும் செயற் படுத்தினார். உடன் சிறை சென்றவர்கள் முத்தமிழ்க் காவலர் கி. ஆ.

பெ. விசுவநாதம், சுரதா, பெருங் கவிக்கோ, சாலை இளந்திரையன், மா. சு. சம்பந்தம், இரா. இளவரசு போன்றோர்.

6. பாவேந்தர்பணி: பாவேந்தர் படைப்புகள் 92இல் நாட்டுடைமை ஆக்கப்பெற்ற மறு திங்களிலேயே, வண்ண வெளியீடுகளாக—குறைந்த விலையில் 25 பனுவல்களைச் செம்பதிப்புகளாக விரைந்து வெளிக் கொணர்ந்தமுதற் பதிப்பாளர்.

7. தமிழ்விழா: விழா எடுப்பது இவருக்கு விளையாட்டுப் போலே! கம்பன் அடிப்பொடி சா. கணேசனார் வழி நின்று, உரிய நேரத்தில் தொடங்கி, குறிப்பிட்டநேரத்தில்முடித்தல்; முறையாக அழைப்பு விடுத்தல், உரியவர் அனைவருடனும் நேரடித் தொடர்பு கொள்ளுதல், நினைவு படுத்துதல், பின் நன்றி தெரிவித்தல் எனக்கட்டுக் கோப்புடன் நிகழ்ச்சி அமைத்தல் இவர் நீர்மை. கண்ணியம் மிக விழா நடத்துதல் இவர் இயல்பு

8. மாணிக்கத் தொண்டு: தமிழாகவே வாழ்ந்து, தமிழுக் காகவே வாழ்ந்து மறைந்தவர் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்; நம் வணக்கத்துக்கும் வழிபாட்டுக்கும் உரியவர். அவரின் தமிழ் வாரிசு நம் மெனா அவர்கள் ஜான்சனுக்கு ஒரு பாஸ்வெல். மாணிக்கனார்க்கு ஒரு மெய்யப்பர். பண்டிதமணிக்கு வ.சுப மா; வ.சுப. மாவுக்கு ஒரு ச. மெ. பெயரால் போட்டிகள் நிகழ்த்திப் பரிசளிக்கிறார். மாணிக்கக் குறள், மூலம்—உரை—அறிமுகம் என வெளியீடு செய்துள்ளார்.

9. திருமுறை அம்பலம் ஏற்றல்

திருமுறைகள் கிட்டிய தில்லையம்பாத்திலேயே திருமுறைக்கு உரிய உயர் இடம் இல்லாமை கண்டு வெகுண்டார்: அண்ணல் மாணிக்கனார் அருமறைகளாம் திருமுறைகளை அம்பலம் ஏற்ற முனைந்தபோது உற்றுழி உதவினார்; உறு பொருள் தந்தார்; முயற்சி வெற்றிபெற முனைந்து நின்றார்.

தில்லை நடராசப் பெருமான் குடமுழுக்கு நாளில் தில்லையம்பலத்தில் திருமுறை அம்பலம் ஏறியது எண்ணி இறும்பூது எய்தினார்.

10. தமிழ் வழிக்கல்வி: இவ்வியக்கம் வீறுடன் செயற்பட அனைத்து ஊக்கமும் ஆக்கமும் அளித்தார் மெனா. இதன் வித்தும் வேருமாக விளங்கி வருகிறார் திருச்சி, தஞ்சை, சென்னை, மதுரை, கோவை, சிதம்பர மாநாடுகளில் எல்லாம் முத்தமிழ்க் காவலர், தமிழ்க் குடிமகனார். பொற்கோ, இளவரசு, சுந்தரராசன் போன்றோருடன் தோளோடு தோள் நின்று மூலவிசையாக விளங்கி வருகிறார். இவ்வியக்கத்தின் வெற்றி, தமிழரின் வெற்றி எனுக் கருதுகிறார். மெனாவின் அடக்கமான பணிகளிலே இது தலையாயது.

11. தமிழ் நெறி இயக்கம்: மணிவிழாக் கொடையாகத் தமிழ்நெறி இயக்கம் தோற்றியுள்ளார். தமிழுணர்வு மங்கி மறைந்து வருகிறது. தமிழைப் பழிப்பவனைத்தாய் தடுத்தாலும் விடாதே' என்றபாவேந்தர் போர்க்குரல் மறைக்கப்பட்டு விட்டது. இந்நிலை மாறவும்,

தமிழ் உரிய நிலைபெறவும்பாடு படுவதே தமிழ்நெறி இயக்கத்தின் குறிக்கோள்.

இவர், நகரத்தார் குட முழுக்கு மலர்களையெல்லாம் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் வெளிக் கொணர்ந்து உதவியுள்ளார். நற்சாந்துபட்டி, ஆத்தங்குடி அரிமழம், விரையாச்சிலை மலர்கள் சான்றாம்.

மெனா அவர்கள் பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவையின் கிளையினைச் சிதம்பரத்தில் துணைவேந்தர் டி.சி. மோகன் தலைமையில், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ விசுவநாதம் அவர்களைக் கொண்டு தொடங்கி வைத்தார்.

மக்கள் சக்தி இயக்கம் : மக்கள் சக்தியைத் தட்டி எழுப்பி ஒன்று திரட்டி ஒரு பெரும் ஆற்றலாக்கி, சமூகப் புரட்சி—மலர்ச்சி செய்ய மனங் கொண்டார் 'முன்னேற்ற நூல்களின் மூலவர்' டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி. இதன் சிதம்பரம் அமைப்பாளராக டாக்டர் மெய்யப்பன் பணியாற்றி வருகிறார்.

மணிவாசகர் நூலகம் 1961 இல் தொடங்கினார். 70 வரை சில நூல்களே வெளியிட்டார். இருவரையே வேலைக்கு வைத்துக் கொண்டு பல்கலைப் பணிநேரம் முடிந்த பின்னர், விற்பனைக்காக வெளியூர் புறப் பட்டு விடுவார். வீடு திரும்ப நள்ளிரவு ஆகிவிடும்.

தேவைதானே கண்டுபிடிப்புகளின் தாய் (Necessity is the mother of invention). அப்படி ஒரு நெருக்கடி நேர்ந்திராவிடில் (74 இல்) வெற்றித்துணைவன் வெளியிடும் எண்ணமே விளைந்திராது என்கிறார். இப்போது மூன்றாம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை ஆண்டுக்குப்பல லட்சம் படிகள் போகின்றன. வெற்றி, தென்றல் துணைவன் எனப் பல்கின. வெற்றி, சுடர், தென்றல் நிலையங்கள். தாமரைப் பதிப்பகம் என விரிந்தன.

செல்வம் கொழிக்கும் காலம். இலக்கிய நூல்கள் பரிசு-பேரை ஈட்டித் தந்தனவே தவிர, பொருள் ஈட்டமே. துணைவன் நூல்கள் பொருள் குவித்தன. இதில் வந்தவை கொண்டு, இலக்கிய வெளியீட்டு இழப்பினை ஈடுகட்டினார்; மேலும் நல்ல பல வரிசை நூல்களை வெளியிட்டார்.புகழும்வந்தது. பொருளும் வந்தது.

கோவைத் தொழிலதிபர் சிவ. சிவனடியான் அவர்கள் சந்திப்பு நேர்ந்தது கூட்டாகத் தொழில் செய்ய விழைந்தார். சேர்ந்தார் மதுரை ஹரிஹரன் & கோ தாள் வாணிகம் தொடங்கி 6-9 84இல் சென்னையில் வெற்றி சிட்பண்ட்ஸ், வெற்றி நிதியகம், 19-8-85 இல் பிரிமியர் பைனான்ஸ், 13-4-88 இல் வெற்றி சிட் இன்வெஸ்ட்மென்ட்ஸ் என வளர்ந்து இப்போது பேறுகள் பதினாறு போலே 16 நிறுவனங்களை. நடத்தி வருகிறார்.

தமிழாசிரியர் ஒருவர் உழைப்பாலும் விடா முயற்சியாலும் வேட்கையாலும், இன்னல் இடர் பல அனுபவித்

துக்கடந்து, இப்போது ஒரு பெரும் தொழிலதிபராகத் திகழ்கிறாரே என்று பெருமைப்பட வேண்டும். வாழும்போதே வரலாறு படைத்துள்ளாரே என வியக்க வேண்டும். இது தமிழுக்குப் பெருமை — தமிழனுக்குப் பெருமை.

குணநலன் : மெனா அவர்கள் ஒழுங்கும் ஒழுக்கமும் வாய்ந்தவர்: இரண்டும் இவரின் இரு கண்கள். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக ஓம்புவார். முழுவளத்தராக விளங்கும் மெனாவின் அன்பும் பண்பும் அருமையும் எண்ணுவாம்.

நினைவாற்றல் இவரின் மிகப் பெரிய பலம். விருந்தோம்பலில் விருப்பினர் பிறர் உண்டு மகிழக் கண்டுகளிக்கும் கனிவினர். சிதம்பரம் வரும் அன்பர்களையெல்லாம் அழைத்து . விருந்தயரும் வளமையர்.

கவலைப்படாத மனத்தர்: இம்மியும் எதற்கும் கவலை கொள்ளாதவர். எனவேதான், படுத்த மறுவினாடியே தூங்கி விடுவார்.

கலகலப்பாகப் பேசுவதிலும் மனம் திறந்து பழகுவதிலும் மெய்யப்பர் மெய்யானவர் அன்பானவர், இன்னார் இனியார் என்னாது எல்லோரிடமும் இனிமையுடன் பழகும் இயல்பர்.

அகத்தின் அழகுமுகத்திலே எப்போதும் புன்முறுவல் பூத்த முகம்.

இவர் ஓர் உழைப்பின் சிகரம். சுறுசுறுப்பில் தேனி. தான் மட்டுமன்று, தன்னைச் சார்ந்தவர்களையும் சுறுசுறுப்பினராக்கும் விறுவிறுப்பு மிக்கவர்

இவர் ஓர். இயக்கம். இவர் ஓர் நிறுவனம். நடந்தவற்றை உடனுக்குடன் மறந்து விடுவதும். இனி நடக்கவிருப்பதைப் பற்றிச் சிந்திப்பதுமே இவருடைய நல்ல குணங்களில்ஒன்று

மணிவிழா மாட்சி : இத்தகு ஏற்றமும் தோற்றமும் பெற்ற மதியால் வித்தகர் மனதால் உத்தமர்.

பொய்யில்லாத் தமிழ்கற்ற
மெய்யப்பன் வாழ்வேட்டில்

கையொப்பம் இடுகிறாள்
காலமகள் அறுபதென்று!

தனிமரமாய்த்தான் நின்றே
சாதிக்கப் பிறந்தமகன்

கனிமரமாய் ஆனதொரு
கதையே, இம்மணிவிழா!

(பல்லடம் மாணிக்கம்)

பிறந்த ஊர் கடியாப்பட்டியில் 16-7-93இல் சுற்றம் நட்பு சூழ 'சாந்தி விழா' சீரும் சிறப்புடன் நிகழ்ந்தது. தமிழகமே திரண்டு வந்திருந்தது; தமிழறிஞர் கவிஞர் எல்லாம் குழுமி இருந்தனர். ஒரே கூட்டம். மக்கள் கடல் முற்றத்திலிருந்து வளைவுக்குச் செல்ல, 1/4 மணி நேரம் ஆகியது. அத்தனை நெரிசல். தடுக்கி விழுந்தால், தமிழறிஞர் மேல்தான் விழ

வேண்டும் அவ்வளவு பேரும் அறிஞர்கள் என்றார். வி. என். சிதம்பரம்.

சிறந்த ஊர் சிதம்பரத்தில் 25-7-93இல் கண்டறியாதன கண்டோம்; கடந்த அரை நூற்றாண்டில் இப்படியொரு பாராட்டுவிழா எவருக்கும் நடந்ததில்லை. அத்துணைக் கூட்டம் என்னுமாறு பெருமக்கள் பாராட்டுவிழா புரிந்தனர். 3-8-93இல் சென்னையில் பெரியதொரு பாராட்டுவிழா இணைவேந்தர் எம்.ஏ.எம். தலைமையில் இப்படி இவ்வாண்டு முழுவதும் அங்கங்கு தமிழகம் முழுவதும் 25 பாராட்டு விழாக்கள். 13-3-94 இல் புதுவையில் நடந்த பாராட்டு விழாவெள்ளிவிழாப் பாராட்டுவிழா. மெய்யப்பரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்ட 'மெய்யப்பர் கும்மி' வெளியிடப்பட்டது.

மணிவிழா என்றதும் 16 இதழ்கள் - ஏடுகள். மணி விழாவினைச் சிறப்பித்துச் சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டன. 'தமிழ் வேள்'என்ற விருதினைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அளித்துப் பெருமைப்படுத்தினார். துலாவூர் ஆதீனம் 'அறமனச் செம்மல்' எனப்போற்றி பட்டமளித்தது.

மேலானவாழ்வு : இவ்வண்ணம் நல்லாசிரியராய் நிலவி, நூலாசிரியராய் உலவி, பதிப்பாசிரியராய்ச் சிறந்து, தொழிலதிபராய் உயர்ந்து ஒளிர்கிறார். மெனாவின் வாழ்வு மேலான வாழ்வாகவே விளங்கி வந்துள்ளது.

'மனம்போல மாங்கல்யம்' ! ஒவ்வொருவர் புகழ் வாழ்வுக்கும் பின், ஒரு பெண் ஒளிர்கிறார் என்பர். 'ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்' என்பது முதுமொழி. இல்லத்தரசியாய்—வாழ்க்கைத் துணை நலமாய் வாய்ந்த மனைவி மகராசி மீனாட்சி ஆச்சி. ஆச்சியின் மாட்சியே. மெனாவின் வளர்ச்சி, மெனாவின் மேன்மைக்கெல்லாம், மேலாம் துணையே வாழ்க்கைத்துணை.

கருணை உள்ளம் படைத்தவர்கள் விருந்தோம்பற் கலையில் மிகச் சிறந்தவர்கள். இல்லத்ரசி இல்லத்தை மாண்போடு கவனிப்பதால் மெய்யப்பன் அவர்கள், தம் குடும்பத்தை நினைக்காமல், சதா காலமும் தமிழையே நினைந்து, தமிழ் உலக முன்னேற்றத்துக்குப் பாடுபட முடிகிறது. (வானதி திருநாவுக்கரசு).

நல்ல ஆய்வு நூல்கள் நிறைய வெயிளிட்டு வரும் இவர். அதே சமயம் பொது மக்கட்கென எளிய இனிய நூல்கள் பல வெளியிட்டும் தமிழர் தம் படிக்கும் திறன் வளர, கல்வி தரம் உயர நாளும் உழைக்கிறார்.

இவரது பதிப்புத் திறனைப் பழம் பதிப்பர்களும் போற்றுகின்றனர். பல்கலைக்கழகங்கள் மதித்துப்போற்றி இவரைத் தம் பதிப்புக் குழுவில் உறுப்பினராக்கி உவக்கின்றன. மைய அரசும் புத்தகக் கொள்கைக் குழுவில் அமர்த்திப் பெருமை செய்துள்ளது.

ஆக்சுபோர்டு, மாக்மில்லன் அரிய நிறுவனங்கள் போலே, அருந்தமிழ் நூல்களை வெளி யிடுவதும், ஏற்றஆசிரியர்களைக் கொண்டு எழுதச் செய்வதும், அழகிய செம்பதிப்புகள் கொணர்வதும் இவர் இலட்சி யம்; துறைதோறும் தமிழுக்குப் புது நூல்கள், கருவி நூல்கள் மூல நூல்கள் பார்வை நூல்கள் படைத்தளிக்க வேண்டும் என் பதே இலக்கு. இல்லங்களில் எல்லாம் நூலகங்கள் இலங்க வும், வீடுகள் தோறும் தமிழ் நூல்கள் விளங்கவும், எல்லோர் கைகளிலும் இருளகற்றும் கை விளக்குகளாக நூல்கள் தவழ வும் மொத்தத்தில் வெளியீடு கள் பெருகி வளர, செயற் திட் டங்களைச் சிந்தித்துச் செயற் படுவதே கொள்கை.

பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்குவது மணி வாசகர் நூலகம், 'மணிவாசகர் பதிப்பு, மன்னும் தமிழுக்கே அணிசெய்யும் அணி. (அரவிந் தன்), 'மணிவாசகர் பதிப்பகம் தமிழ்நாட்டு மாக்மில்லன் பதிப் பகம்' (எஸ்.டி. காசிராஜன்), மணிவாசகர் நூலகம் வெறும் பதிப்பகம் மட்டுமா? அல்ல! அது அன்பு மனங்களின் அரண்மனை வாசம். இன்பத்தமிழுக்கு எழு நிலை மாடம்.

பதிப்புரைகள் : அனைத்தும் ஆராய்ச்சிப் பதிப்புரைகள். நூலுள் நுழைய அவை கோபுர வாசல்கள். தோரண வாயில்கள். அவற்றையெல்லாம் தொகுத்து 'மெய்யப்பனார் பதிப்புரைகள்' எனக் கொத்தாக வெளியிட லாம் (ஊரன் அடிகள்), பதிப்பு செம்மலின் பதிப்புகள், சமுதா யத்தில் பதியமிட்டு வளர்க்கப் பட வேண்டியவை (குமரி அனந்தன்).

இப்படி இவர் பதிப்பும் பதிப்புரையும் பாராட்டுமாறு உள. பதிப்பகம் பூத்துக் குலுங்கிப் பொற்கனிகள் மல்கி மிளிர்கிறது. ஆல் போல் தழைத்து, அறுகுபோல் வேரோடி முன்னணிப் பதிப்பக மாக முதல் பத்தில் ஒன்றாக இருந்து, ஐந்தில் ஒன்றாகச் சிறந்து, மூன்றில் ஒன்றாக உயர்ந்து நிலவுகிறது.

இத்தகு ஏற்றத்திற்கும் முன் னேற்றத்திற்கும் மூலவிசையாக முதுகெலும்பாக அமைபவர் மெனா அவர்கள். எனவே இவரைப் 'பதிப்புச் செம்மல்' என்றும், 'பதிப்புச் சுடர்' என வும் தமிழ் உலகம் கொண்டாடு வதில் வியப்பில்லை!

இத்துறையில் ஏற்றம் பெற்றமைக்கு இவர் கூறும் ஏதுக்கள்; தொடர்ந்து கற்றல், திட்டமிட்ட உழைப்பு, காலத்தை மதித்தல், பயணங் கள். கடிதப் போக்கு வரத்து, புதுமையைக் கையாளுதல், தொழிலாளர் உறவு, விலைக் கொள்கை, விளம்பர உத்தி, வாடிக்கையாளர் உபசரிப்பு, ஆகியவைதான் என்கிறார் பதிப்பரசராய்ப்பிறங்கும்இவர், பதிப்புலக இமயமாய் மேலோங்க வாழ்த்துவோம்.

—கவிஞர் பார்வையில்

புத்தக புராணம்

கவிச்சக்ரவர்த்தி வைரமுத்து

என்னை
மணல் கருகும்
பாலையில் விடுங்கள்,

இருப்பேன்

ஜீவராசி இல்லாத்
தீவில் இடுங்கள்

கிடப்பேன்

காற்றே தொடாத
கரகத்தில் விடுங்கள்

உயிர்ப்பேன்

ஆனால்-

என்னைப்
புத்தகம் இல்லா அறையில்
பூட்டுங்கள்

இரண்டொரு மணியில்
இறப்பேன்

உயிரின் சுவாசமல்லவா
புத்தகம்?

உனக்குள் ஒரு
சூரியனல்லவா
புத்தகம்?

அட்டையிட்ட
அமுதமல்லவா
புத்தகம்?

உனக்கு வரம்வர யாரோ
இருந்த தவமல்லவா
புத்தகம்?

ஒரு
நல்ல புத்தகம்
திறந்து கொண்டால்
நரகத்தின் வாசல்
மூடப்படும்

ஒவ்வொரு பக்கம்
நகரும்போதும்
நீ

எதிர்காலத்துள்
எட்டு வைக்கிறாய்

ஒரு புத்தகம்
முடிகிறது

மனசின் மர்மப்பிரதேசம்
விடிகிறது

புத்தகம் என்பது
எத்தனை அற்புதம்?

தூரம்
தூர்ந்துபோகும்

இறந்தகாலம்
மீண்டும் வாழும்

கத்தியின்றி ரத்தமின்றி
உள்ளங்கையில் யுத்தம்

புத்தகம் என்பது
எத்தனை சௌகரியம்!

இதோ

செவ்வாய் கிரகம்
பத்து ரூபாய்

இதோ

கிளியோபாட்ரா
என் பக்கத்தில்

அதோ

என் மேஜைமேல் நிலா

என் பரண்மீது
பசிபிக் கடல்

கால்மாட்டில்
அண்டார்டிக்கா

கட்டிலின் கீழே
ராஜ ராஜசோழன்

அடடா

புத்தகம் என்பது
எத்தனை சௌகரியம்?

சில நூல்கள்
மலைகள்

பார்க்கலாம்
பெயர்க்க முடியாது

சில நூல்கள்
சாலை ஓரப்பெண்கள்

ரசிக்கலாம்
பின்பற்றக்கூடாது

சில நூல்கள்
கண்ணாடிகள்

நித்தம் ஒருமுறை
பார்த்தாக வேண்டும்

சில நூல்கள்
விலை மகளிர்

முடிந்ததும்
மறந்து விடவேண்டும்

சில நூல்கள்
பணம் மாதிரி

எப்போதும் கையில்
இருக்க வேண்டும்

புத்தகத்தின் புனிதம்
எத்தனை பேர் அறிவார்?

மாணவர்க்கு -

அது
கட்டாயத்தாலி

காதலர்க்கு
தபால்பெட்டி

விருந்தாளிகட்கு
தலையணை

சிலருக்கு
அது சேமிப்பு வங்கி

நூலகர்க்கு
அது
ஓர் எண்ணிக்கை

புத்தகத்தின் புனிதம்
எத்தனைபேர் அறிவார்?

புததகம்
நாகரிகத்தின் உச்சம்

மணல் - கல்
பனை ஓலை — காகிதம்
ஒலியிழை — ஒளியிழை
கணிப்பொறி

புத்தகத்தின் அவதாரம்
காலந்தோறும் மாறும்

வாகனம் வேறு வேறு
இலக்கு ஒன்றுதான்

மானுடம்
மானுடம்

கொஞ்சம்...
கொஞ்சம் திரும்பிப்
பாருங்கள்

குழந்தையின் கையில்
கத்தி

பைத்தியத்தின் கையில்
துப்பாக்கி

குடிகாரன் கையில்
குழந்தை

இந்தியன் கையில்
ஓட்டு

குழந்தை வளரும்வரை
பைத்தியம் தெளியும்வரை
குடிகாரன் திருந்தும்வரை

தேர்தலை நிறுத்துங்கள்

இல்லை
தேசத்தைக்
கொளுத்துங்கள்

—இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல என்ற நூலிலிருந்து,
வெளியீடு : சூர்யா லிட்டரச்சர் (பி) லிட். சென்னை—24.

காலமானார்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் தலைவரும், பைலட் பப்ளிகேஷன்ஸ் உரிமையாளரும், முப்பது ஆண்டுகளுக்கு மேல் குழந்தை இலக்கியத் துறையில் சேவை செய்து, "சிறுவர் இலக்கியச் செம்மல்" என்ற பெருமை பெற்ற **திரு கெ. சி. தெய்வசிகாமணி** அவர்கள் 7-8-95 அன்று இரவு 10-20 மணி அளவில் இயற்கையெய்தினார். **திருமதி N.D செல்வநாயகிஅம்மாள்** மற்றும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர்

சங்கப்பலகை பொற்காலத்திற்கு அழைப்பு

டாக்டர். அப்பாஸ் இப்ராஹிம்

எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், பதிப்பாளர்கள், வாசகர்கள் ஆகிய அறிவுலகத்தின் நான்கு தூண்களும், 50 ஆண்டு கால சுதந்திர வாழ்க்கைக்குப் பின்னரும் கூட, நியாயமான இடத்தை தமிழில் பெற முடியவில்லை. பொதுவான விநியோக முறை தமிழ் நாட்டில் ஏற்படுத்தப் படாத குறையே இதற்கான அடிப்படைக் காரணமாக இருக்கிறது என்று கண்டு அறியப்பட்டிருக்கிறது, சங்கப்பலகை, தமிழுக்கான இந்தக் குறையை நிறைவு செய்யவேண்டும் என்று 12-08-95 அன்று சங்கப்பலகை புரவலர் திரு மணலி எஸ். இராமகிருஷ்ணன் முன்னிலையில் நடந்த ஆய்வில் முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

தமிழகத்திலுள்ள உள்ள ஒவ்வொரு கிராமம் மற்றும் நகரப்பகுதிகளுக்கும் ஒரு ஊழியரை புத்தகம் / சஞ்சிகை விநியோகிப்பாளராக, மாதச் சம்பளம் மற்றும் ஊக்குவிப்புத் தொகையுடன், சங்கப்பலகை நியமிக்க இருக்கிறது. சுமார் 5500 ஊழியர்கள், இவ்வாறு முதல் கட்டத்தில் நியமிக்கப்படுகிறார்கள். இதன்மூலம் படித்தவருள்ள ஒவ்வொரு குடும்பமும், தமிழில் உள்ள எல்லா நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் மட்டுமல்லாது, குடும்பம் முழுவதுக்கும் அத்தியாவசியமான ஆங்கில இதழ்களையும் சேர்த்துப் படித்துப் பயன் பெறமுடியும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் தினமும் ஒரு நாளிதழ், 3 சஞ்சிகைகள், வாரத்திற்கு இரு புத்தகங்கள் என விநியோகிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாவது திட்டமாக, தமிழகமெங்கும் 50 இடங்களில் தனது விநியோகம் மற்றும் நிரந்தர புத்தகக் காட்சி மையங்களை சங்கப்பலகை அமைக்கப் போகிறது. தமிழில் வெளிவரும் எல்லா புத்தகங்களும் சஞ்சிகைகளும் இந்த மையங்களில் விற்பனைக்குக் கிடைக்கும்.

மூன்றாவது திட்டமாக, இந்த 50 மையங்கள், வாரம் ஒரு புத்தகக்காட்சி வீதம் 52 வாரங்கள் கொண்ட சுற்றாக ஆண்டுதோறும் புத்தகக் காட்சியை, வாகனங்களுடன் சென்று, திருமண கூடங்கள், தொழிற்சாலைகள், விழாக்கள், ஆகிய இடங்களில் நடத்த இருக்கிறார்கள்.

நான்காவது திட்டமாக தமிழகம் எங்கும் உள்ள பள்ளிகளில், ஆண்டுதோறும் பள்ளி நூலகத்துக்காக மாணவர்களிடம் வாங்கும் கட்டணத்தை, புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் வாங்க முழுதாகப்பயன்படுத்தும்படி ஊக்குவிக்கப்படும்.

5-வது திட்டமாக, நூலக வரிகள் மூலம் வசூலாகும் பணம் முழுவதையும் புத்தகம் மற்றும் சஞ்சிகைகள் வாங்க மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்ற பழக்கத்திற்கு பொது நூலக இயக்கத்தை மாற்றுவதற்கான பணியை வரி கொடுக்கும் பொதுமக்களின் துணையோடும், உயர்நீதி மன்றத்தின் துணையை நாடியும் அமுல்படுத்தப்படும். பொது நூலக இயக்கம், நூலக வரியாக பெறும் தொகைக்கு இணையாக, மாநில அரசு Matching Grant கொடுத்தாக வேண்டும் என்பது நூலகச் சட்டப்படியான, கடமையாக்கப்பட்டிருந்தும், இத்தொகை நூலக தளவாடச் சாமான்கள், புத்த

கம் மற்றும் சஞ்சிகைகள் வாங்கப் பயன்படுத்துவதில்லை. ஊழியர்களின் சம்பளத்திற்கே இதை சட்ட சம்மதம் இன்றி நூலக ஆணைக்குழு சம்மத மின்றி இப்போது தமிழக அரசு, சரி செய்து கொள்கிறது. நூலக வரியாகப் பெறும் பணத்தை பல ஆண்டுகளுக்கு உள் ஆட்சி அமைப்புகள் சட்ட விரோதமாக, தங்களின் வேறு தேவைக்குப்பயன்படுத்துகிறார்கள். இந்தப் பிரச்சினையும் உயர்நீதி மன்றத்தின் மூலம் சங்கப் பலகை சரி செய்ய வேண்டும் என்று முடிவு செய் திருக்கிறது.

மாநில அரசு, நூலக வரிக்கு இணையாக அளிக்கும் மானியத்தின் அளவுக்கு, மத்திய அரசும் பொது நூலக மானியம் அளிக்க வசதியாக UGC **Public Library Grant Commission (PLGC)** என்ற பெயரில் பொது நூலக மானிய கமிஷன் ஒன்றை ஏற்படுத்தவும் சங்கப் பலகை இயக்கம் நடத்தும். பொது நூலகப் பணியை பொறுத்தவரை, மத்திய அரசு கடந்த 50 ஆண்டுகளாக தன் பொறுப்பை தட்டிக் கழித்து வரும் ஒரு கசப்பான உண்மையை சங்கப்பலகை நாடு முழுவதுக்கும் வெளிச்சமாக்கிக் காட்டும்.

சங்கப்பலகையின் வர்த்தக ரீதியான திட்டங்களை நிறைவேற்ற, "சங்கப்பலகை விநியோக நிறுவனம்" என்ற பெயரிலேயே, ஒரு வர்த்தக நிறுவனத்தை Dr. அப்பாஸ் இப்ராஹிம் பொறுப்பில் இம் மாதமே பதிவு செய்யப்பட்டுள்ளது

தமிழில் இலக்கியத்துறை மட்டுமல்லாது, பத்திரிகை இயல் பொருளாதாரம் தொழில் விஞ்ஞானம் தொழில் நுட்பம், கம்பயூட்டர், சட்டம் மருத்துவம் ஆகிய எல்லாத் துறைகளிலும் புத்தகங்களும் பததிரிகைகளும் உருவாக சங்கப் பலகை வழிசெய்யும். இதன் மூலம் அரசைச் சார்ந்து நிற்காயல் தொழில் ரீதியாகவே தமிழுக்கும் எழுத்து உலகுக்கும் பலமான நிரந்தரமான அடித்தளம் அமைப்பது சாத்தியமே என்பதைச் சங்கப்பலகை செயலில் காட்டும்.

எழுத்தாளர்கள் பத்திரிகையாளர்கள் தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோர் சொந்தமாகவோ அல்லது பதிப்பகங்கள் மூலமாகவோ தமிழில் வெளியிடும் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளுக்கு, குறைந்த பட்சமாக 5000 பிரதிகளை விற்றுத்தரும பொறுப்பை சங்கப்பலகை இதன் மூலம் ஏற்கிறது.

எழுத்தாளர்களுக்கு கேரளத்தில் கோட்டயத்தில்

இயங்கும் சாகித்ய பிரவர்த்தக சங்கம் 30 சதவிகிதம் வரை Royalty தருகிறது உலகிலேயே இதுதான் Record ஆகும். சங்கப் பலகை தமிழகத்தில் சுயமாக புத்தகத்தை வெளியிடக் கூடிய எழுத்தாளர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இதை நடைமுறையில் சாத்தியமாக்கப்போகிறது. தமிழக பதிப்பகங்கள், தங்கள் நூல்களுக்கு 5000 பிரதிகள் வரை சங்கப் பலகை விற்பனை ஏற்பாடு செய்து தரும்போது, எழுத்தாளர்களுக்கும். பத்திரிகையாளர்களுக்கும் 30 சதவிகித ராயல்டி தந்துதான் ஆக வேண்டிய நிலை தானாக ஏற்படும். இல்லாவிடில், எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள், தாங்களாகவே தங்கள் புத்தகங்களை வெளியிட்டு, சங்கப்பலகை மூலம் அப்பயனை பெறுவதை யாரும் தடுக்க முடியாது.

சங்கப்பலகை விநியோகத் திட்டத்தின் கீழ் தமிழகத்தின் 5000 ஊர்களில் பயன்படுத்தப் பட்ட நூல்கள் மற்றும் சஞ்சிகைகளை, ஒருமாத கால உபயோகத்திற்குப் பிறகு, ஆங்காங்கே உள்ள பொது மற்றும் பள்ளி நூலகங்களுக்கு நன்கொடையாக அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வாசகர்களின் வரவேற்பை விஞ்ஞான முறையில் ஆண்டுதோறும் கணிப்பதன் மூலம், சிறந்த நூல்களை எழுதிய தமிழ் எழுத்தாளருக்கும், தமிழ் பதிப்பாளருக்கும் தமிழ் பத்திரிகையாளருக்கும் நாட்டிலேயே மிகப்பெரிய சங்கப்பலகை பரிசுத் திட்டத்தை நிறுவவும் திட்டமிடப் பட்டுள்ளது.

BUTTER GHEE & OILS AT ITS BEST :

Phone : 5223095 & 522752

GIRI & CO

near Kothawal Bazar

142, AUDIAPPA NAICKEN STREET, MADRAS-600 001

Pure Cow's Ghee available for Flavour & Freshness

Buy "ANNAPOORNA COFFEE"

கொஞ்சமாவது விவரம் தேவை

தம்பி ஸ்ரீநிவாசன்

எத்தனையோ துறைகள் பற்றிய செய்தி விவரங்கள் சுலபமாகத் தெரிகின்றன. சினிமா பற்றி செய்தி வராத பத்திகை விதிவிலக்காக இருக்கலாம். அதற்கென்றே தனி ஏடுகள் பல உள்ளன. ஜோதிடம், வணிகம், வேளாண்மை, போன்று எத்தனையோ துறைகள் பற்றி ''லேடஸ்டாக என்ன'' என்று அறிந்துகொள்ள அந்தத்துறையில் பத்திரிகைகள் உள்ளன.

இந்த எழுத்து, புத்தகம் வெளியிடுதல். விற்பனை செய்தல் என்று ஒரு தொழில் இருக்கிறதே (தொழிலா, துறையா?) அதற்கு என்று தமிழிலே ஒரு ஏடு இல்லையே என்ன செய்ய. இதற்கென்றே ஒரு சிறு பத்திரிகை தொடங்குவதா? தொழில் அக்கறை காட்டுவோர்மனம் வைத்தால் நல்லதொரு பத்திரிகையைக் கொண்டுவர முடியும், இதற்கு அவசியமும் இருக்கிறது.

மலையாளத்திலும் கன்னடத்திலும் புத்தகச் செய்தி பற்றி பத்திரிகைகள் உள்ளன. ஆண்டு மலர்கள் உள்ளன. ''இம்மாதப் புத்தகம்'' என்ற விருது பெரும் நூல்களுக்கு அதிகக் கவனிப்பு உண்டு.

எந்தப் பதிப்பாளர் வெளியிடும் நூல் பற்றியும் அறிய முடிகிறது. தமிழிலே அப்படி எதுவும் இல்லை. புத்தகச் செய்திகளை அறிவிக்க முதலில் தென்மொழிப் புக்தக டிரஸ்ட் முப்பதாண்டுகளுக்கு முன்பு வெளியிட்டது "புத்தக நண்பன்'' என்று. வாசகர் வட்டம் கிருஷ்ணமூர்த்தி லக்ஷ்மி தம்பதியர்'' ''நூலகம்'' இதழை ஏற்றுத்தொடர முயன்றனர் ஐந்திணை திரு.கதிரேசன் ஓர் முயற்சி தொடங்குவதாக அறிவித்தார்.

புத்தகச் செய்தி வாசருக்கு உதவுவதோடு பதிப்பாளருக்கும் எழுத்தாளருக்கும் கூட

மிகவும் உதவியானது எப்போதாவது முக்கியமானவைகள் தொடர்புள்ள நூல் என்றால் மிகவும் செலவிட்டு ஆடம்பர வெளியீட்டு விழா நடத்தும் பதிப்பாளர்கள் அந்தச் செலவில் ஒரு சிறு பங்கை முதலீடாக்கினால் போதும், கொஞ்சம் உழைப்பு, கொஞ்சம் திறமை சேர்த்து படிக்கத் தூண்டும் வகையில் ஒரு புத்தகச் செய்தி தயாரிக்க முடியும்.

புதுப் புத்தகங்கள் பற்றிய விவரம் மட்டுமல்லாமல், தயாரிப்பில் உள்ள எதிர்பார்ப்புகளையும் அறிவிக்கலாம் புத்தகத் தொடர்புடைய பரிசுகள், விழாக்கள், எழுத்தாளர். பதிப்பாளர் மறைவு, நூற்றாண்டு, என்று பல இலக்கிய நிகழ்ச்சிகளை பற்றிச் சொல்ல முடியும்.

ஏதோ சுற்றறிக்கையாக சில தொழில் அமைப்புகளுக்கு மட்டும் வரும் தகவல்களை புத்தகத் துறையைச் சார்ந்த எல்லோருடனும் பகிர்ந்துகொள்ள முடியும்.

உதாரணத்துக்கு ஒன்று. தில்லி நேஷனல் புத்தக டிரஸ்ட்டில் சமீபத்தில் பத்து வெளி நாட்டுக் காட்சிகள் அமைத்தார்கள். இந்திய புத்தகங்களுக்களுக்காக தமிழ்ப் புத்தகங்கள் ஐந்தாறுதான் இருந்தன.

மிகமுக்கியமான காட்சிகளுக்குக் கூட தமிழ் நூல்கள் வருவதில்லையே என்பது அவர்கள் குறை. அவர்கள் தனிப்பட எல்லாப் பதிப்பாளர்களையும் அணுகுவதில்லை. பதிப்பாளர் சங்கங்களுக்குத்தான் எழுதுவார்கள். அவர்கள் தமது உறுப்பினர்களுக்குப் பிரதி எடுத்துத் தெரிவிக்க வேண்டும். அதற்குள் காலக்கெடு தீர்ந்து விடும்.

சமீபத்தில் இந்தியமொழிப் பதிப்பாளர் தேசிய கருத்தரங்கு நடைபெற்றது. இதையொட்டி, புத்தக அமைப்பு (கவனிக்கவும்: எழுத்துக்காக அல்ல, தயாரிப்பு நேர்த்திக்கு) பரிசுகள என்று பதினான்கு பிரிவுகளுக்குமூன்று பரிசுகள் அறிவித்தார்கள். ஆங்கிலம், ஹிந்தி அல்லாமல் பிற மொழியினருக்கு. இந்தத் தகவல் தெரியாததால்தானோ என்னவோ ஒரு தமிழ்நூல் கூட ஒரு பிரிவில் கூட இடம்பெறவில்லை. பரிசும் பெறவில்லை.

மற்றும்ஒன்று சென்னையிலாவது இப்போது ஆண்டுதோறும் நடைபெறும். ஆகஸ்டு மாணவர் புத்தகக் காட்சி. டிசம்பர் - ஜனவரி பொது புத்தகக் காட்சி சமயங்களில் எல்லாப் பதிப்பாளர்களின் எல்லா நூல்களையும் ஒரே சமயத்தில் பார்க்க முடிகிறது. தனி

யார்களும் நிறுவனங்களும் மொத்தமாக தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடிகிறது.

தமிழ்நாட்டுக்கு வெளியே பிற மாநிலங்களிலும், தமிழ் நாட்டின் உள்ளே சிறு கிராமங்களிலும், அயல் நாடுகளில் உள்ள தமிழ் நிறுவனங்களிலும் புத்தகச் செய்தியை எப்படி எட்டுவது? தில்லி பொது நூலகத்தின் தமிழ் நூல்களை ஆராய்ந்து பட்டியலிடும் திரு ராஜகோபாலன் கணக்குப்படி ஜனவரியில் புத்தகம் வெளியிட்டவர்களின் எண்ணிக்கை 119. இந்த நூற்றுப் பத்தொன்பது பேரின் புத்தகப்பட்டியலைத் தேடிப் பிடிக்க முடியுமா எல்லாப்பதிப்பாளர்களின் நூல்களையும் ஓரளவு அடிப்படை விவரங்களோடு ஒரே பட்டியலாக்கி, இந்தச் செய்தியைப் பரப்ப முடியாதா?

ஒவ்வொரு பதிப்பாளரும் அடிப்படையில் புத்தக வியாபாரிதான். அவரவர் புத்தகம் விற்பனையாகவேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டியது தான். அதற்குமேல் போய் ''தமிழ்ப் புத்தக விவரம் பரவ வேண்டும்' தமிழ்ப் புத்தகம் வாங்கும் பழக்கம் அதிகரிக்க வேண்டும். தமிழ்ப்புத்தக விற்பனை என்பது மொத்தமாக அதிகரித்தால், நமது நல்ல புத்தகம் தானே அதிகம் விற்பனையாகும்'' என்ற எண்ணத்துடன் பாடுபவார்களா? ''என் தோட்டத்துக்கு மட்டும் தண்ணீர் வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டால், மழை பெய்யும்போது நமது தோட்டத்துக்கும் தானே வருகிறது! வாரா வாரம், மாதா மாதம் புதுப் பத்திரிகைகள் தமிழில் வெளிவருவதானது தமிழ் வாசகனின் படிக்கும் நேரத்தையும் புத்தகம் வாங்கும் சக்தியையும் ஒரே நேரத்தில் அபகரிக்கும் ஆபத்தாகும். இதற்கு மாற்றாக புத்தகம் படிக்கும் பழக்கத்தைப் பரப்ப ஒரு பெருமுயற்சி தேவைப்படுகிறது.

இப்படியும் ஒரு தேவை இருக்கிறது என்று இந்தத் துறையில் உள்ளவர்கள் உணர்ந்து செயல்படும் நேரம் வந்துவிட்டது.

50 ஆண்டு நூலகத் தமிழ்

ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தி கலைக்கோவில்' என்னும் இந்த நூல் மூலமாய்த் தமிழ் மக்களுக்கு ஒரு துறையில் வழிகாட்டியாய் விளங்குகிறார். சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் சென்னைச் சர்வ கலாசாலையால்நடத்தப்பட்ட கிரந்நாலயப் பாடசாலையில் இவர் சேர்ந்தார். அந்த வகுப்பில் பி.ஏ., எம். ஏ. பட்டங்களைப் பெற்ற பலர் சகபாடிகளாக இருந்த போதிலும் இவரே முதல்வராகத் தேறினது இவரது புத்திக் கூர்மைக்கும் விடாமுயற்சிக்கும் நல்ல அறிகுறியாகும். பலர் கிரந்தாலயங்களில் நூற்றுக் கணக்கில் மாதச்சம்பளம் பெற்று வந்தாலும் ஸ்ரீமான் கிருஷ்ணமுர்த்தி கிரந்தாலய மூலமாய் ஜீவனம் பெறாமல் வேறு வழிகளில் பாடுபட்டு, பிழைப்புக்கு வேண்டிய பொருளைப் பெற்று வருகிறார். இருந்தாலும் கிரந்தாலய சம்மந்தமாக ஆழ்ந்த பத்தியுடன் பல வழிகளில் சேவை செய்து வருகிறார். சென்னையிலுள்ள அநேக புத்தகாலயங்களை இவர் சீர்திருத்தியிருக்கிறார். கல்கத்தாவிலுள்ள ஒரு புத்தகாலயத்தையும் அம்மாதிரி சீர்படுத்தியிருக்கிறார். சென்னைக் கிரந்தாலயச் சேவையின் நுண்ணிய விஷயங்களைப் பல வியாசங்கள் மூலமாக வெளியிட்டு வருகிறார். இந்த வியாசங்களை நான் ஒன்று விடாமல் படித்திருக்கிறேன். அவைகளின் பாவமும் கற்பனா சக்தியும் அவைகளில் ததும்பும் ஊக்கமும் உத்ஸாகமும் அதிகமாய் அமைந்துள்ளன. கிரந்தாலய சாஸ்த்திரத்தைச் சதா உபாஸனை செய்து, அதன் பிரயோகங்களை அநுஷ்டானத்துக்குக் கொண்டு வந்து, அதனால் நம்நாட்டுக்கு ஏற்படக் கூடிய நன்மைகளை கொண்டு வந்துயிருப்பது, இந்த வியாசங்களினால் எளிதில் வெளியாயிற்று.

இந்த வியாசங்களில் சிலவற்றைக் கோத்து ஒரு மாலையாகக் கட்டிச் சுருக்கிக் கலைக் கோவில் என்ற இப்புத்தகமாய் இப்பொழுது கிருஷ்ணமூர்த்தி தயாரித்திருக்கிறார். இப்புத்தகத்தில் கிரந்தாலய சாஸ்திரத்தின் அஸ்திவாரமான ஐந்து சூத்தி

கரங்களையும் 14 அத்தியாயங்களில் சரளமான வியாக்கியானங் களுடன் விஸ்தரிக்கிறார். பிற்பாடு 2 அத்தியாயங்களில் சில நாடுகளில் அமைந்திருக்கும் கிரந்தாலய இயக்கத்தை வர்ணித்துத் தமிழ்நாட்டில் அந்த இயக்கம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் சூசிப்பிக்கிறார் கடைசி இரண்டு அத்தியாயங்களில் கிரந்தாலயச் சேவகர்கள் அநுஷ் டிக்க வேண்டிய சில கிரியாமுறைகளைச் சுருக்கமாய் விவரித் திருக்கிறார். சிறுவர்களுக்கு நூல்களினிடம் ஆர்வம் உண் டாக்கும் விதம் இறுதி அத்தியாயத்தில் அமைந்துள்ளது.

இந்தப் புத்தகமே, கிரந்தாலய சாஸ்திரத்தைப் பற்றி விஸ் தாரமாய் முதன் முதல் தமிழில் வெளிவரும் புத்தகமாகும். ஸ்ரீமான் கிருஷ்ணமூர்த்தியின் கைராசியால் மேன்மேலும் தமிழில் இம்மாதிரியான புத்தகங்கள் பல ஏற்பட வேண்டும்.

சீ. ரா. ரங்கநாதன்

இந்திய கிரந்தாலய சங்கத் தலைவன்

C. மாரிஸ்நகர்,
டில்லி சர்வகலாசாலை,
17 மார்ச், 1952

கண்ணீர் அஞ்சலி

டாக்டர் P.A. மோகன்ராஜ் 22 ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழக நூலகராக பணியாற்றியவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல சிறந்த நூலக இலக்கியம் படைத்தவர். ரங்கநாதன் — கவுலா விருது பெற்றவர். பல ஆண்டுகள் நூலகக்கல்வி பேராசிரியராக போதித்தவர். கவர்னருக்கு தகவல் பணியாற்றியவர். MALA துணைத் தலைவராக தேர்வு பெற்றவர். சமீபத்தில் காலமானார். அறுபது வயதைக் கடந்தவர் வல்லமையுடன் வாழ்ந்து காட்டியவர்.

அவர் இழப்பு நூலக சமுதாயத்திற்கு பேரிழப்பாகும்

அவர் குடும்பத்தாருக்கு நூலக இலக்கியம் ஆறுதல் கூறி' அனுதாபம் காட்டி, அஞ்சலி செலுத்துகிறது

—ஆசிரியர்

படியுங்கள்

டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் (தொகுதி-1) தொகுப்பாசிரியர் வத்சலா பூவண்ணன். பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா நான்காம் குறுக்குச் சாலை. கோவை 641 011 விலை ரூ. 150/-

இந்தியாவின் தலைசிறந்த குழந்தை எழுத்தாளர் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு பெற்ற ஒரே இந்தியர் என்ற பெருமைக்குரிய டாக்டர் பூவண்ணன்தான் இதுவரை எழுதியுள்ள நூறு சிறுவர் நூல்களைத் தொகுத்துப் பத்துப் பெரிய தொகுதிகளாகக் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அதில் இது முதல் தொகுதி.

குழந்தைகளைப் பற்றிய கதைகளை குழந்தை இலக்கியம் என்று எண்ணி எழுதிக் குவித்து வரும் இந்நாளில் குழந்தைகளுக்காக எழுத முற்படுபவர் டாக்டர் பூவண்ணன். இந்தத் தொகுப்பிலும் அத்தகைய கதைகளைக் காணலாம்; குழந்தைகளைப் பாத்திரங்களாகக் கொண்ட கதைகளும் இருக்கின்றன.

வழக்கமான சிறுகதைத் தொகுப்பாக இல்லாமல், நாடகம், கவிதை, சித்திரக்கதை தாவல், புதிர்கள் என்று பல வகைப் படைப்புகளும் இடம் பெற்றிருக்கின்றன எனவே ஒரு புத்தகத்தைப் படித்த அனுபவத்தை விட ஒரு பத்திரிகையை படித்த உணர்வே ஏற்படுகிறது.

இந்நூல், பூவண்ணன் வாழ்வின் இமாலயச் சாதனையாகும்

கடந்த 46 ஆண்டுகளாக இடைவிடாமல் குழந்தை இலக்கிய வேள்வி செய்துவரும் தவச் செல்வர் இவர், 22 பரிசுகளை வென்றவர்.

இவருடைய சிறுவர் நூல்களின் எண்ணிக்கை நூறு குழந்தை இலக்கிய வரலாற்றை 1960 – லேயே படைத்தவர். பின்னர் இது சிறுவர் இலக்கிய வரலாறு என்று புதிய படைப்பாக வானதி வெளியிட்டார்.

பேராசிரியர், நூலாசிரியர் குழந்தை எழுத்தாளர், இதழாசிரியர், சொற்பொழிவாளர், நாடக ஆசிரியர் பாடலாசிரியர் ரைக்தி கதையாசிரியர் கவிஞர், சிறுகதையாசிரியர் திறனாய்வாளர், வரலாற்றாசிரியர்,பண்பாளர் எழுத்துவேந்தர் இவரே.

நல்ல முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் புத்தகம். வீட்டில், பள்ளிகளில், குழந்தைகளுக்குப் படித்துச் சொல்லப் பயன்படும்.

—சக்கரத்தாழ்வார்

Editor, publisher and owner: Dr P PERUMAL 6. Mu. Va. St.Arumbakkam, MADRAS—600 106. and Printed by P .AYYASAMY at Thirumalai Deivam Art Printers 14, Yadaval Street, Aminjikarai, MADRAS-600 029
Editor: NOOLAGA GNANI Dr. P.PEREMAL, M. A., M. Lib. Sc., Ph. D.;

நாமறிந்த அரங்கநாதன் வாழ்மை (1994) வே தில்லை நாயகம். பக்.16+345. ரூ. 80/- திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை—18.

டாக்டர் வே.தில்லைநாயகம் என்றே இனி அழைக்க வேண்டும். டாக்டர் பட்ட ஆய்வுரையையும் மிஞ்சிய நூல் இது.

உலகம் போற்றும் நூலக விஞ்ஞானி அறிவியல் மேதையின் கதை இது.

உடல்நோயைப் போக்கும் மருந்து கசப்பாகத்தான் இருக்கும்.

இந்நூல் வெளியீட்டு விழப்வில், பலர் மெல்ல மெல்லவே நூலை வாசிக்க முடிந்தது என்றனர்.

இந்நூல்மக்கள் தமிழில் வெளிவந்திருந்தால் இன்னும் பல பேர் படித்து பயன் பெற்றிருப்பர்.

—நவின்



இந்த ஆங்கில நூலை (1991)பலரும் படித்திருக்கலாம். இதை எழுதியவர் நூலகப் பேராசிரியர் கிர்ஜா குமார். வடநாட்டவர். உபதலைப்புக்கு விடை தருவதே சிறப்பு.

வாசகர்கள் இந்நூல் பற்றி எழுதி அனுப்பலாம்.

நூலக இலக்கிய நூலகத்தில், நூல் படிகக கிடைக்கும்

டாக்டர் ரங்கநாதன் அவர்களை ஆழ்ந்து கற்க இது பயன்படும்.

—தராசு

தொகுப்பு : பெ.இராமனாதன் — பக். 336—ரூ 65 — மணிவாசகர் பதிப்பகம். 8/7 சிங்கர் தெரு, சென்னை—108)

நூலக நடவடிக்கைகளை எளிமைப்படுத்த உதவும் 36 கட்டுரைகள். நூலக வளங்களைப்பகிர்ந்து கொள்ளல், தகவல் தொடர்பு கணினி மயமாக்குதல், மின்னனு செய்தித்தாள், கட்டமைப்பு போன்ற தலைப்புகளில் அனுபவம் மிக்கவர்கள் ஆழ்ந்து எழுதியிருக்கிறார்கள்.

நூலகர்களுக்குப் பயன்படற புத்தகங்க.

- இது ஒரு தமிழக அறிவியல் பேரவை, புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி வெளியீடு.
- கணிப்பொறி பயன்படாத வாழ்வியல் துறையே இல்லை எனலாம்.
- தகவல் தெரிவிக்கும் வகையில் கணிப்பொறியின்பங்கு அளவிடற்கரியது.
- தமிழ் வழி நூலகக் கல்வி கற்க, கற்பிக்க மிகவும் பயனுடைய நூல்.
- இதன் பயன்பாட்டை காண — எல்லா நூலகப் பணிகளும் கம்ப்யூட்டர் வழியே நடப்பதை— சென்னையில் அமெரிக்க தகவல் நூலகம், பிரிட்டிஷ் கவுன்சில் நூலகம் சென்று, கண்டு பயன் பெறலாம்.
- அடுத்த பதிப்பில், நூல் முழுமைக்கும் தமிழ்—ஆங்கிலம், ஆங்கிலம் — தமிழ் ஒரே,கலைச் சொல் அகராதியாக வெளியிடலாம். மொழிபெயர்ப்புக்கு பயன்படும் வகையில் சொற்கள் தர நிர்ணயம் பெறுவது அவசியம்.

— இந்திரா

ஆசிரியர்
நூலகம் இலக்கியம



பொருத்தமான பரிசும், பாராட்டும்

எழுத்தாளர் மணவை முஸ்தபாவுக்கு சென்னையில் நடந்த விழாவில் ராஜா சர் முத்தையா செட்டியார் நினைவுப் பரிசு ரூ, 50 ஆயிரம்வழங்கப்பட்டது. அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் மு.அ.மு இராமசாமி பரிசை வழங்கினார்,

தமிழ் யுனஸ்கோ கூரியரை வெற்றி கரமாக நடத்தி வருகிறார் தவிர, பல நூல்களை எழுதி கலைச்சொல் ஆக்கத்துக்கு நிறைய உழைத்திருக்கிறார். இந்த விருது அவருக்கு மட்டுமின்றி தமிழுக்கும் கிடைதத பெருமை,

பாரிசு தமிழ்ச்சங்கம் வெளியிட்ட "செவாலியர் சிவாஜி என்ற நூலின் வெளியீட்டு விழா சுசன்னையில் நடந்தது நூலை அமைச்சர் கே ஏ கிருஷ்ணசாமி வெளியிட்டார் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் தலைவர் இரபியிதீன் பெற்றுக்கொண்டார்

நூலை சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட்ட மணி மேகலை பிரசுரம் லேனா தமிழ் வாணன், ரவி தமிழ்வாணன் இருவருக்கும் தமிழ்நாடு முஸ்லிம் லீக் 'தலைவர் ஆ, கா அ அப்துல் சமது பொன்னாடை போர்த்திப் பாராட்டினார்.

புதிய வரவு

1 இனிய குடும்பத்திற்கு பெண்களுக்கு பயனுள்ள யோசனைகள் ஆகஸ்டு (1995) —ராம திலகம் & அரசு. மகா. லட்சுமி பக். 184. ரூ. 34.
குடும்பபாங்பாகிற்குத் தேவையான சமையல்கலை, ஆன்மிகம், மருத்துவம் நிர்வாகக் கலை முதலிய பல்வேறு துறைகளையும் சுருங்கச் சொல்லி கலைக் களஞ்சியமாக விளங்குகிறது.

பெண்கள் அனைவருக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாக விளங்கும்

2 திருக்குறள் விநாடி—வினா (மார்ச் 1995) கோ. பார்த்தசாரதி பக் 128 ரூ 22
எளியவருக்கும் குறள் கருத்துக்கள் சென்று சேரவேண்டும் இளம் சிறார் உள்ளத்தும் பதிய வேண்டும்

அறத்துப்பாலில் உள்ள சிந்தனைத் துளிகளைச்செப்பம் செய்து சீர்தூக்கி விநாடி - விடைகளாக தந்துள்ள பாராட்டுக்குரியது

திருக்குறள் ஒவ்வோர் இல்லத்திலும் இருக்க வேண்டும். அனைவரும் இந்நூலை படிக்க வேண்டும். படிப்பிக்க வேண்டும் திருக்குறள் சிந்தனை நாளும் வளர இது போன்ற நூல்களை பிறர்க்கு வழங்கி மகிழவேண்டும்.

3. சிரிக்கும் மலர்கள் (ஜூலை 1995) கவிஞர் ரஹிமா பக் 120. ரூ. 24

சிறந்த சிறுகதைகளும் குறுநாவலும் இணைந்த தொகுப்பே இந்நூல். இதில் உள்ளவை நவரசக் கதைகள் மனிதாபிமானம், அறிவியல் போக்கு உள்ளவைஇப்படைப்புகள்

4 வள்ளலார் வாழ்கின்றனர் (ஏப்ரல், 1992) கவிஞர் முருக சாணன். பக் 128 ரூ. 22
திரு அருட்பா ஆறு திருமுறைகளிலும் சிற்சில பாடல்களைத்தேர்ந்து எடுத்து அவைகளின் கருத்துக்களையும் நயங்களையும் எந்த சூழ்நிலையில் அந்தக்கவிதைகள் முகிழ்த்தன என்பது பற்றி சிந்தனைகளையும் கொண்டது இந்நூல்.
சித்திரம்நூலைப் படிக்கும் வண்ணம் தூண்டுகிறது.

5. வள்ளலார். (டிசம்பர், 1991). கவிஞர் சீனி திருநாவுக்கரசு. பக். 120. ரூ. 15.

ஆண்டவனின் திருவருளை பெறவேண்டின் சாதி, மதம், சமயம் வருணம், நாடு, மொழி காலம் பழக்கம் வழக்கங்கள். மூடநம்பிநக்கைகள் இவை போன்ற தடைகளை அறவே ஒழிக்கவேண்டுமென அன்றே முழங்கினார் வடலூர் வள்ளலார். ஆற்றல் மிக்க நல்ல குடிமக்களை உருவாக்குவதே ஒருமைப்பாட்டிற்கு மிக முக்கிய பணியாகும் அதற்கு இந்நூல் பெரிதும் உதவும்.

6 பிரச்னை ஒரு பிரச்சனையல்ல (செப்டம்பர் 1995) ஜே.வின்சன்ட். பக் 128. ரூ. 20. இப்புத்தகத்தை ஒரு முறை படியுங்கள். ஒன்றல்ல பல பிரச்சனைகளை வெற்றிகரமாகச் சமாளிப்பீர்கள் பிரச்சனை மேகம் கலைந்து நிர்மலமான மனதுடன் பளிச்சென உங்கள் முகம்மலருவது கண்கூடு.

மேற்கண்ட ஆறு நூல்களையும் வெளியிட்டவர்கள். கலைவாணி புத்தகாலயம். (கவிஞர் சீனி, திருநாவுக்கரசு). தபால் பெட்டி எண். 49602, சிவஞானம் ரோடு, பாண்டி பஜார், தியாகராயநகர், சென்னை—600 017.

மலிவுப்பதிப்பு நிச்சயமாக புத்தக பிரியர்களுக்கு ஒருவரப் பிரசாதம்.

—ஆழி, கடலூர்-1

தரமற்ற ஆபாசப் புத்தகங்களையும் நாடுவோரே அதிகம் இந்தச் சமுதாயம் எப்பொழுது தான் திருந்துமோ?

ஆ வே இராமசாமி
வைரி செட்டிப்பாளையம்

வர்த்தமானன் பதிப்பகம் முன்பதிவுத் திட்டத்தின் கீழ் குறைந்த விலையில் தரமான நூல்களை வெளிபிட்டு வருகிறது லிப்கோவும் முன்னர் வெளியிட்டது.

—ச மு விமலானந்தன்
திருப்பத்தூர் (வ ஆ)

ஒரு நாளிதழ், அது வெளிவரும் மொழியில் வெளிவரும் புதிய நூல்களை மக்களுக்கு உடனுக்குடன் 'விபரங்களுடன்' அறிமுகம் செய்ய வேண்டும்...

—தமிழண்ணல்- மதுரை-20
நன்றி: தினமணி 23-8-95

NISSAT develops new library automation software

EC NEWS NETWORK
NEWDELHI

NATIONAL Information system for Science and Technology (NISSAT). in collaboration with the Defence Scientific Information & Documentation Centre.(DESIDOC),has developed an automation software for libraries.

The software, 'Sanjay,' runs on low Configuration PCs and is suited for automation of small and medium - sized libraries.

Based on CDS/ISIS, it runs on PC-AT systems with a minimum of IMB RAM and is compatible with MS-DOS 3 2 or above. CDS/ISIS is a tool for storage and retreival of textual information developed by UNESCO.

The first copy the software was given to Larson and Tourbo (L&T). According to Abhijit Lahiri' joint advisor of the Department of Scientific and Industrial Research (DSIR), the Unix, Wiudows and LAN versions of the software will be made available soon.

நூலகப்

இலக்கியம்

நல்வாழ்த்துக்கள்

ஸ்ரீ அய்யனார்

நூலகத்துக்கு
நல் வாழ்த்துக்கள்

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly September, 1995
Regd No. TN / MS (N) / 922 R.Dis 4441 / 95.E.

GAJENDRA®

GAJENDRA ENTERPRISES

209/6, LINGHI CHETTY STREET, MADRAS - 600 001.
PHONE : OFFI : 5224450, 518105 RESI : 420851